بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 8

இதழ் 49

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1445 - 22 ஜமாதில் அவ்வல்★ ஹிஜ்ரி ஷம்ஸி 1402 - ஃபத்ஹ் 07 ★ டிசம்ம்பர் 2023

## அல்லாஹ்வின் கட்டளை

وَمَنۡ اَظۡلَمُ مِمَّنِ افۡتَرٰی عَلَی اللّٰہِ کَذِبًا اَوۡ کَذَّبَ بِاٰیٰتِہٖ ؕ اِنَّہٗ لَا یُفۡلِحُ الظّٰلِمُوۡنَ ﴿۲۲﴾

**பொருள்**

அல்லாஹ்வைப் பற்றி பொய் புனையவோ அல்லது அவனுடைய அடையாளங்களைப் பொய்யாக்கவோ செய்பவனை விட அக்கிரமக்காரன் யார்? நிச்சயமாக அக்கிரமக்காரர்களுக்கு வெற்றி கிடைப்பதில்லை.
(அல்அன்ஆம்:22 )

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## ஈமான் என்பது நம்பிக்கையாளருக்கும் அல்லாஹ்விற்குமிடையில் உள்ள ஓர் இரகசியம் ஆகும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள். அல்லாஹ்வுடன் இந்த இரகசியத்தை ஸஹாபா பெருமக்கள் ஏற்படுத்திக் கொண்டதைப் போன்று எமது தோழர்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகின்றேன்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

இந்த பொய்யான வாழ்க்கை சாம்பலாகிவிடாத வரை நம்பிக்கையாளர் இறை வணக்கம் செய்வதிலிருந்து சோர்ந்து விடாமல் இருப்பதும், சோம்பலை வெளிப்படுத்தாமல் இருப்பதும் அவசியமாகும். மேலும், அதனுடைய இடத்தில் புதிய வாழ்வும், இன்பம் வழங்கக் கூடிய வாழ்வின் தொடரும் ஆரம்பமாகி விடாத வரையிலும், இந்த தற்காலிக உலக வாழ்வின் தாக்கமும், வேதனையும் அகன்று ஈமானில் ஓர் இன்பமும், ஆன்மாவில் ஒரு நிம்மதியும், சுகமும் தோன்றி விடாத வரையிலும் அவர் சோர்ந்து விடக் கூடாது.

இந்த நிலையை மனிதன் அடையாத வரை ஈமான் முழுமையானதாகவும், சரியானதாகவும் இருப்பதில்லை என்பதை நன்றாக புரிந்து கொள்ளுங்கள். இதன் காரணமாகவே, நீர் இறை வணக்கம் செய்து கொண்டே இருப்பீராக! என்று அல்லாஹ் இங்கு கூறினான். உமக்கு முழுமையான அந்தஸ்தைக் கொண்ட ஈமான் கிடைத்து விடாத வரையிலும், அனைத்து தடைகளும் இருள்களின் திரைகளும் நீங்கி தற்போது நான் முன்பு இருந்தவர் இல்லை என்றும் இன்னும் கூறப்போனால், தற்போது புதிய நாட்டில் புதிய பூமியில், புதிய வானத்தில் இருக்கின்றேன் என்றும் மேலும் நானோ வேறு ஒரு புதிய படைப்பினம் ஆவேன் என்று புரிய வரும் வரை நீங்கள் இறை வணக்கம் செய்து கொண்டே செல்ல வேண்டும். இந்த இரண்டாம் வாழ்வையே ஸூஃபிமார்கள் பகாஃ (எனும் உயிர் வாழ்வு) என்று பெயரிட்டுள்ளனர்.

மனிதன் இந்த படித்தரத்தை அடைந்து விடும்போது பின்னர் அல்லாஹ்வின் ஆன்மா அவனுள் ஊதப்படுகின்றது. வானவர்கள் அவர் மீது இறங்குகின்றனர். இறந்த பிணம் பூமியில் நடப்பதை காண வேண்டும் என்று ஒருவர் விரும்பினால் அவர் அபூபக்ரை பார்த்துக் கொள்ளட்டும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைக் குறித்து கூறியதில் உள்ள இரகசியம் இதுவே ஆகும். மேலும் அபூபக்ர் (ரலி) அவர்களின் அந்தஸ்து என்பது அவருடைய வெளிப்படையான அமல்களால் அல்ல. மாறாக, அவரது உள்ளத்தில் இருக்கின்ற அந்த விஷயத்தினால் ஆகும்.

நினைவிற் கொள்ளுங்கள்! ஈமான் என்பது நம்பிக்கையாளருக்கும், அல்லாஹ்விற்குமிடையில் இருக்கின்ற ஓர் இரகசியம் ஆகும். அதனை படைப்பினங்களில் அந்த நம்பிக்கையாளரை விட வேறு எவரும் அறிய முடியாது.

இதன் தொடர்ச்சி : 12ம் பக்கம்...

## நபிமொழி

(2476) ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இப்னு மர்யம் உங்களிடம் நீதி நெறித் தீர்ப்பவராக தோன்றாத வரை அந்த நேரம் நிலைபெறாது. அவர் சிலுவையை முறிப்பார்; மேலும் பன்றியைக் கொல்லுவார்; மேலும், ஜிஸ்யா வரியை ரத்து செய்வார். மேலும், செல்வம் எந்த அளவிற்கு மிகுதியாக இருக்கும் என்றால் எவரும் அதனை ஒப்புக் கொள்ள மாட்டார்.

(விளக்கம்) ஹஸ்ரத் ஜைனுல் ஆபிதீன் வலியுல்லாஹ் ஷாஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த ஹதீஸ் ஒரு மகத்துவ மிக்க முன்னறிவிப்பை உள்ளடக்கியுள்ளது. இதன் மூலம் வெளிப்படையான சிலுவையை முறித்தல், பன்றியைக் கொல்லுதல் போன்றவற்றிக்கான காரணம் நிரூபணமாகவில்லை.

(2477) ஹஸ்ரத் ஸல்மா பின் அக்வஃ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கைபர் போரில் நெருப்பு மூட்டப்பட்டிருந்ததைக் கண்டார்கள். இந்த நெருப்பு எதற்காக மூட்டப்பட்டிருக்கின்றது? என்று அன்னார் (ஸல்) வினவினார்கள். அதற்கு, நாட்டுக் கழுதைகளின் இறைச்சியைச் சமைப்பதற்காக என்று மக்கள் பதிலளித்தார்கள். அதைக் கேட்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், பானைகளை உடைத்து விடுங்கள்; அவற்றிலுள்ள (இறைச்சி, உணவு ஆகிய)வற்றை எறிந்து விடுங்கள் என்று கட்டளையிட்டார்கள். அதிலுள்ளவற்றை எறிந்து விட்டு அவற்றைக் கழுவி விடலாமா? என்று மக்கள் கேட்டனர். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் (அவ்வாறே) கழுவிக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.
(ஸஹீஹ் புகாரி, கிதாபுல் மழாழிம்,2008-ம் ஆண்டு காதியான் பதிப்பு )

* * * * *

## மேதியா மற்றும் பாரசீகத்தின் அரசர் சைரஸுக்கு அல்லாஹ் இரண்டு கொம்புகளை உடையவர் என்ற பெயரை வழங்கியுள்ளான். இந்த அரசர் திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள பண்புகளை தன்னகத்தே கொண்டுள்ளார். மேலும் ஏசாயா நபியின் வேதத்தில் இருந்தும் இந்த விவகாரத்திற்கு ஆதரவாக சான்று கிடைக்கின்றது

**துல்கர்னைன் தொடர்பாக ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் ஆராய்ச்சி**

وَیَسۡـَٔلُوۡنَکَ عَنۡ ذِی الۡقَرۡنَیۡنِ ؕ قُلۡ سَاَتۡلُوۡا عَلَیۡکُمۡ مِّنۡہُ ذِکۡرًا ﴿ؕ۸۴﴾ (18:84)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்தின் விளக்கவுரையில் கூறுகின்றார்கள்:

தற்போது நான் துல்கர்னைன் தொடர்பான எனது ஆராய்ச்சியை எடுத்துரைக்கின்றேன். முந்தைய விரிவுரையாளர்கள் மற்றும் ஐரோப்பிய ஆராய்ச்சியாளர்களின் எண்ணத்தை நான் முன்னர் எடுத்துரைத்து விட்டதை போன்றும், ஜமாஅத்தின் முதல் கலீஃபா ஹஸ்ரத் மவ்லவி நூருத்தீன் ஸாஹிப் (ரலி) அவர்கள் எடுத்துரைத்தது போன்றும், எனது கருத்தின்படியும் துல்கர்னைன் ஈரானிய அரசர்களில் யாரோ ஒருவரின் பெயர் ஆகும். ஹஸ்ரத் மவ்லவி ஸாஹிப் (ரலி) அவர்கள் அவருடைய பெயர் கைக்பாத் என்று கூறி வந்தார்கள்.

அந்த அரசர் முதலாவது தாராயே ஆவார் என்ற வேறுபாட்டை சில ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஆனால், என்னைப் பொருத்த வரை எல்லாவற்றையும் விட முதலில் திருக்குர்ஆனில் எடுத்துரைக்கப்பட்டுள்ள இந்த நிபந்தனையை பார்க்க வேண்டும். மேலும், அந்த அரசரை வரையறுக்க வேண்டும்.

திருக்குர்ஆனில் இருந்து இந்த விஷயம் தெரிய வருகின்றது: அதாவது துல்கர்னைனுக்கு இல்ஹாம் அல்லது கனவுகள் வந்தன. 2) அவர் தமது பகுதியில் நாட்டை வெற்றிக் கொண்டவாறு மேற்கு நோக்கி சென்று விட்டார். அங்கு ஒரு கருமையான

இதன் தொடர்ச்சி : 12ம் பக்கம்...

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஐந்தாவது கிலாஃபத்தின் அருளுக்குரிய காலக்கட்டத்தில் தஹ்ரீகே ஜதீத் திட்டத்தின் ஆறாம் பதிவேட்டின் துவக்கம் மற்றும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தூய மற்றும் புதிதாக பைஅத் செய்த அஹ்மதிகளின் பொருள் தியாகம் தொடர்பான சம்பவங்கள்**

**நீங்கள் உங்களுக்கு விருப்பமான பொருளை இறை வழியில் செலவு செய்யாத வரை இரட்சிப்பு வரை கொண்டு சேர்க்கின்ற அந்த உண்மையான நன்மையை நீங்கள் பெற முடியாது - (ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்)**

**தப்லீஃக் செய்து ஜமாஅத்தை வளர்க்க வேண்டும்; மேலும் உலகின் ஒவ்வொரு நாட்டிலும் அஹ்மதிய்யா ஜமாஅத் மூலம் இஸ்லாத்தின் கொடியை பறக்கச் செய்ய வேண்டும் என்பதே தஹ்ரீகே ஜதீத் திட்டத்தின் நோக்கமாகும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த திட்டத்தை துவக்கத்தில் பத்து ஆண்டுகள் வரை நீட்டித்திருந்தார்கள். மூன்று ஆண்டுகளில் இருந்து பின்னர் பத்தாண்டுகளாக நீட்டித்து விட்டார்கள். பின்னர் பத்து ஆண்டுகள் முழுமையடைந்தபோது மகிழ்ச்சிகரமான விளைவுகள் வெளிப்பட்டபோதும் மேலும், தியாகம் செய்யக்கூடியவர்களின் விருப்பத்தின் அடிப்படையிலும் மேலும் காலத்தை நீட்டித்து விட்டார்கள். பின்னர் இந்த திட்டம் நிரந்தரமானதாக ஆகிவிட்டது.**

**இன்று மீண்டும் பத்தொன்பது ஆண்டுகள் முழுமையடைந்ததையொட்டி ஆறாம் பதிவேட்டிற்கான அறிவிப்பை நான் செய்கின்றேன். இனி புதிதாக இணையக் கூடிய புதிய அஹ்மதிகளும், மேலும் புதிதாக பிறக்கக் கூடிய குழந்தைகளும் அல்லது எவரெல்லாம் முன்னர் எந்த பதிவேட்டிலும் இல்லையோ அவரும் ஆறாம் பதிவேட்டில் இணைக்கப்படுவார்**

**பாலஸ்தீனியர்களை எப்போதும் துஆக்களில் நினைவிற் கொள்ளுங்கள்; அவர்களை மறவாதீர்கள்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 03 நவம்பர் 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1402 ஆண்டு **நுபுவ்வத்** மாதம் **03ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ ۬
وَمَا تُنْفِقُوْا مِنْ شَيْءٍ فَاِنَّ اللّٰهَ بِهٖ عَلِيْمٌ

பொருள்: நீங்கள் உங்களுக்கு விருப்பமான பொருள்களிலிருந்து இறைவனுக்காக செலவு செய்யாத வரை உங்களால் ஒருபோதும் உண்மையான நன்மையை பெறமுடியாது.நீங்கள் எதனை செலவு செய்கின்றீர்களோ அதனை நிச்சயமாக அல்லாஹ் நன்கு அறிகின்றான்.

நீங்கள் உங்களுக்கு விருப்பமானவற்றை அல்லாஹ்வின் வழியில் செலவழிக்கும்போதுதான் நன்மையின் உயரிய தரம் உங்களுக்கு கிடைக்கும் என்பதை அல்லாஹ் இந்த வசனத்தில் தெளிவாகக் கூறிவிட்டான்.

இதனை விளக்கியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

நீங்கள் உங்களுக்கு விருப்பமான பொருளை இறை வழியில் செலவு செய்யாத வரை இரட்சிப்பு வரை கொண்டு சேர்க்கின்ற அந்த உண்மையான நன்மையை நீங்கள் பெற முடியாது.(ஃபத்ஹே இஸ்லாம், ரூஹானீ கஸாயீன் தொகுதி 3, பக்கம் 38)

பின்னர் பிறிதோரிடத்தில் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: செல்வத்தின் மீது நேசம் கொள்ளுதல் கூடாது.

لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ

,என்று அல்லாஹ் கூறுகின்றான். நீங்கள் உங்களுக்கு விருப்பமான பொருள்களிலிருந்து இறைவனுக்காக செலவு செய்யாத வரை உங்களால் ஒருபோதும் உண்மையான நன்மையை பெறமுடியாது. (ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் தஃப்ஸீர், தொகுதி 2, பக்கம் 130)

அன்னார் (அலை) கூறினார்கள்: ஒரு மனிதன் பயனற்ற, வீணான பொருட்களை செலவு செய்வதால் நன்மையை செய்ததாக வாதிட முடியாது. நன்மையின் வாசல் குறுகியதாக இருக்கின்றது. வீணான பொருட்களை செலவு செய்வதால் எவரும் நன்மையின் (அந்த) வாசலில் நுழை முடியாது. நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்;

لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ

என்ற தெளிவான இறை வசனம் உள்ளது. விருப்பத்திலும், விருப்பமான பொருளை, மிகவும் நேசத்திற்குரிய பொருளை செலவு செய்யாத வரை இறை நேசர் என்ற அந்தஸ்தை ஒருவர் பெற முடியாது. துன்பத்தை ஏற்றுக் கொள்ள விரும்பவில்லையென்றால் எவ்வாறு வெற்றி பெற முடியும்? ஸஹாபா பெருமக்களுக்கு கிடைத்த அந்த அந்தஸ்தை அவர்கள் இலவசமாகவா பெற்றுவிட்டார்கள்? உலகப் பட்டங்களைப் பெறுவதற்காக மனிதனுக்கு எந்த அளவு செலவினங்களையும்,துயரங்களையும் சகித்துக் கொள்ள நேரிடுகின்றது! என்று பாருங்கள். அதன் பிறகு தான் உள்ளத்திற்கு (நிரந்தரமான) அமைதியையும், நிம்மதியையும் கொடுக்காத ஒரு சாதாரண பட்டம் கூட கிடைக்கின்றது. பட்டம் கிடைக்கின்றதுதான். ஆயினும், அதனால் உள்ளத்திற்கு மன அமைதி நிச்சயமாகக் கிடைக்கும் என்பது உறுதி கிடையாது. ஆயினும், அதற்காக மனிதன் கடினமாக உழைக்கின்றான். ரலியல்லாஹு அன்ஹும் என்ற பட்டம் உள்ளத்திற்கு அமைதியையும், நிம்மதியையும் தரக் கூடியதாகவும், கருணை மிக்க எஜமானனுடைய திருப்தியின் அடையாளமாகவும் இருக்கின்றது. அந்தப் பட்டம் ஸஹாபிகளுக்கு எளிதாகவா கிடைத்திருந்தது? விஷயம் என்னவென்றால், தற்காலிக துயரங்களை சகித்துக் கொள்ளாத வரை உண்மையான மகிழ்ச்சிக்குக் காரணியாக திகழும் இறைத் திருப்தி கிடைக்க முடியாது. இறைவன் ஏமாறக் கூடியவன் அல்லன். எவர்கள் இறை விருப்பத்தை பெறுவதற்காக துன்பங்களை குறித்து பொருட்படுத்துவதில்லையோ அவர்கள் நற்பேறு பெற்றவர்கள் ஆவர். ஏனெனில், நிரந்தரமான மகிழ்ச்சி, மற்றும் நிரந்தரமான ஒளியும் தற்காலிகத் துன்பத்திற்கு பிறகுதான் நம்பிக்கையாளருக்கு கிடைக்கின்றது. (மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 75 -76, 1984-ம் ஆண்டு பதிப்பு)

எனவே, செல்வத்தை செலவு செய்கின்ற இந்த புரிதலைத் தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அல்லாஹ்வினுடைய வழிகாட்டலுக்கேற்ப நம்மிடத்தில் உருவாக்க விரும்பினார்கள். எவர்கள் இந்த விஷயத்தை புரிந்து கொண்டார்களோ மேலும் தங்களது செல்வத்தை இறை வழியில் முன் வைத்தார்களோ (அவர்கள் நற்பேறு பெற்றவர்கள்). தங்களுக்கான தேவைகள் இருந்தபோதிலும் ஜமாஅத்தைச் சேர்ந்தவர்களில் ஒரு பெரும் கூட்டத்தினர் தங்களது செல்வத்தை மார்க்கத் தேவைகளுக்காக எடுத்து வைக்கின்றனர். இது ஜமாஅத்தின் மீதும், ஒவ்வோர் அஹ்மதியின் மீதும் அல்லாஹ் செய்த மாபெரும் கருணையாகும். தங்களது தேவைகளை புறந்தள்ளி விட்டு மார்க்கத் தேவைகளுக்காக தங்களது தியாகங்களை முன் வைத்த ஆயிரக்கணக்கான உதாரணங்கள் காணக் கிடைக்கின்றன. உலகின் பொருளாதார நிலைமைகள் மிகவும் மோசமாகிக் கொண்டே செல்வதை நாம் பொதுவாக காண்கின்றோம். குறிப்பாக முன்னேற்றம் அடைந்த நாடுகளைப் பார்க்கின்றபோது, அவர்களுக்கு எல்லா

பொருட்களும், எளிதாகவும், செழிப்பாகவும் கிடைத்துக் கொண்டிருந்த அந்த சூழல் தற்போது இல்லை. தற்போது உலகில் போரின் சூழல் நிலவுகின்றது. ஐரோப்பாவிலும் உக்ரைன் மற்றும் ரஷ்யாவிற்கிடையில் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அது ஐரோப்பாவின் நிலைமையை சிறிது மோசமாக்கி விட்டது.

எவ்வாறு இருப்பினும், முன்னேற்றம் அடைந்த நாடுகளில் வாழ்வாதாரம் பெருமளவு பாதிக்கப்பட்டு இருக்கின்றது. பிறகு அந்த நாடுகளிலுள்ள அரசியல்வாதிகளின் ஊழல்களின் காரணமாகவும் மிகவும் மோசமான நிலைமை உருவாகி விட்டது. ஆயினும், நிலைமை அவ்வாறு இருந்த பின்னரும் அஹ்மதிகள் தங்களது தியாகங்களில் முன்னேறிக் கொண்டே செல்கின்றனர். ஓர் உலகவாதிக்கு இது எப்படிப்பட்ட விஷயம் என்றால், அதனை புரிந்து கொள்வது கடினமாகும். ஆனால், இந்த தியாகங்களின் விளைவாக அல்லாஹ்வின் அருள்கள் தென்படுகின்றன என்பது ஈமானில் உறுதியாக இருக்கின்ற மக்களுக்கு தெரியும்.

நவம்பர் மாதத்தின் முதல் வாரத்தில் தஹ்ரீகே ஜதீதுடைய புதிய நிதியாண்டிற்கான அறிப்பு செய்யப்படுவதை ஜமாஅத் மக்கள் அறிவர். எனவே தஹ்ரீகே ஜதீத் தொடர்பாகவே இன்று நான் சில சம்பவங்களை எடுத்து வைப்பேன்.

லாஹூர் மாவட்டத்தின் ஸதர் லஜ்னா ஸாஹிபா எனக்கு எழுதியிருப்பது என்னவென்றால், ஒரு கூட்டத்தில் தஹ்ரீகே ஜதீத் சந்தா தொடர்பாக கவனமூட்டுமாறு என்னிடம் கூறப்பட்டது. அந்தக் கூட்டம் நடுத்தர வருமானத்தைப் பெறக் கூடிய நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்த மக்களைக் கொண்ட சபையாக இருந்தது. அவர்கள் ஏற்கனவே அதிகமாக தியாகம் செய்யக் கூடியவர்களாக இருந்தனர். எனவே எனக்கு வெட்க உணர்வும், தயக்கமும் ஏற்பட்டது. நான் அவர்களுக்கு எவ்வாறு கவனமூட்டுவது? என்று எண்ணிக் கொண்டிருந்தேன். ஆயினும், என்னிடம் கூறப்பட்டிருந்ததால் நான் அவர்களுக்கு கவனமூட்டுகின்ற நிலையில் இருந்தேன். பெண்கள் ஒருவர் மற்றவரை முந்திக் கொண்டு தியாகம் செய்த காட்சியை நான் கண்டபோது எனது ஆச்சரியத்திற்கு அளவே இருக்கவில்லை. குறைந்த வருமானத்தையுடையவர்கள் எந்த அளவிற்கு தியாகம் செய்தனர் என்றால் அதனை பல செல்வந்தர்களால் சிந்தித்துக் கூட பார்க்க முடியாது. அதனைப் பார்த்து எனக்கு வெட்கம் ஏற்பட்டது. ரொக்கமாகவும், நகைகளாகவும் பல லட்சம் ரூபாய்களை அவர்கள் கொடுத்து விட்டனர்.

இதேபோன்று வக்கீலுல் மால் அவ்வல் அவர்களுடைய அறிக்கையும் இருக்கின்றது. அது ஒரு நீண்ட பட்டியலாக, பல பக்கங்களைக் கொண்டதாக இருக்கின்றது. அது எந்தப் பெண்கள் தங்களது நகைகளைக் கொடுத்தனரோ அவர்களுடைய பெயர் பட்டியல் ஆகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி (ரலி) அவர்கள் தஹ்ரீகே ஜதீத் திட்டத்தை அறிவித்தபோது அன்னார் (ரலி) அந்த சமயத்தில் எடுத்து வைத்த கோரிக்கைகளில் ஒன்று பெண்களுடைய தியாகம் தொடர்பாகவும் இருந்தது. அதாவது நீங்கள் நகைகளை வாங்காதீர் என்றோ அல்லது குறைவாக வைத்திருங்கள் என்றோ அப்போது பெண்களிடம் கூறப்பட்டது. நீங்கள் தியாகங்கள் செய்ய வேண்டும் என்று அவர்களிடம் கூறப்பட்டது. நான் என்ன புரிகின்றேன்? என்றால் கையில் உள்ள நகைகளை தியாகம் செய்வதை விட நகைகளை வாங்காமல் இருப்பது மிகப் பெரிய தியாகம் ஆகும். முன்னால் இருக்கக் கூடிய பொருளைக் கொடுப்பது மிகவும் கடினமான வேலையாகும்.

எனவே ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் முன் வைத்த அந்தத் திட்டத்தில் அஹ்மதிப் பெண்கள் அப்போதும் தியாகங்கள் செய்தனர். தற்போதும் செய்து வருகின்றனர். இது ஒரு நாட்டில் மட்டும் நிகழும் சம்பவங்கள் அல்ல. மாறாக, இந்த மேற்கத்திய நாடுகளிலும் கூட எப்படிப்பட்ட பெண்கள் இருக்கின்றனர் என்றால், அவர்கள் தங்களுடைய அனைத்து நகைகளையும் சந்தாவிற்காக கொடுத்து விடுகின்றனர். அதன் பிறகு புதிய நகைகளை வாங்குகின்றனர். பின்னர் நிம்மதியிழந்து அந்தப் புதிய நகைகளையும் அவர்கள் சந்தாவாக அவர்கள் கொடுத்து விடுகின்றனர். ஏனெனில், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியதுபோன்று அவர்கள் நிரந்தரமான மற்றும் நிலையான மகிழ்ச்சியைப் பெறுவதற்கு விரும்புகின்றனர். அந்த இன்பம் தியாகம் செய்யாமல் கிடைக்க முடியாது. பின்னர், ஏழைகள் இருக்கின்றனர். அவர்கள் தங்களது வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி சந்தாக் கொடுக்கின்றனர். இவ்வாறான பல மக்களுக்கு அல்லாஹ் உடனடியாக வழங்கி விடுகின்றான். அவர்கள் கொடுத்த சந்தா தொகையை விட அதிமாக எப்படிப்பட்ட வழிமுறைகளின் மூலம் அவர்களுக்கு அல்லாஹ் வழங்குகின்றான் என்றால் அவற்றைக் கண்டு அவர்களே ஆச்சரியம் அடைந்து விடுகின்றனர். அவ்வாறான மக்களுடைய சில சம்பவங்களை நான் இங்கே எடுத்துரைப்பேன். அத்துடன் நான் செல்வந்தர்களுக்கு கூறும் விஷயம் என்னவென்றால், அவர்களும் இவற்றிலிருந்து படிப்பினை பெற வேண்டும். தங்களது தியாகங்களின் தரத்தை உயர்த்த வேண்டும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் தம்முடைய ஒரு குத்பாவில் கூறுகின்றார்கள்:

ஏழை மக்கள் எவ்வாறு இருக்கின்றனர் என்றால் அவர்கள் தமது வருமானத்தில் 45 சதவிகிதத்தை சந்தாவாக கொடுத்து விடுகின்றனர். அதாவது அவர்களின் தினசரி உணவை அடிப்படையாக வைத்து அதற்கேற்ப சந்தாவின் தொகையை வைத்து நாம் பார்க்க வேண்டும். ஆனால், செல்வந்தர்கள் ஒன்றரை சதவிகிதம் மட்டுமே கொடுக்கின்றனர். இன்னும் கூறப்போனால், தற்போது ஏழைகளில் நூறு சதவிகிதம் கொடுக்கக் கூடியவர்களும் இருக்கின்றனர். ஆனால், செல்வந்தர்களோ ஒரு சதவிகிதம் மட்டுமே கொடுக்கின்றனர். ஆக, இந்த அடிப்படையில் பார்க்கும்போது ஏழைகளுடைய நூறு சதவிகிதத் தொகை செல்வந்தர்களின் மொத்தத் தொகையை விட குறைவானதாகவே தோன்றும். ஆனால் ஏழைகளின் தியாகத்தின் தரம் மிக உயர்ந்ததாகும். எனவே இந்த வகையில் செல்வச் செழிப்புள்ள மக்களும் தங்களை தாமே ஆய்வு செய்து பார்க்க வேண்டும். அல்லாஹ் ஒருபோதும் கடனை வைத்திருப்பதில்லை. எழுநூறு மடங்காகக் கொடுப்பதாகவும் அல்லது அதை விட அதிகமாக கொடுப்பதாகவும் மற்றோர் இடத்தில் அல்லாஹ் கூறுகின்றான்.

எவ்வாறு இருப்பினும் நான் முன்னர் கூறியதுபோன்று தியாகம் செய்யக் கூடியவர்களின் சில உதாரணத்தை இன்று நான் எடுத்துரைப்பேன். அதன் மூலமாக அவர்களின் தியாகங்கள் மற்றும் ஈமானிய உணர்வுகள் நமக்கு தெரிய வரும். அதேவேளையில் அவர்களின் மீது உடனடியாக இறங்கிய அல்லாஹ்வின் அருட்களும் நமக்கு தென்படும்.

கினிபஸாவ் என்பது ஆஃப்ரிக்காவினுடைய ஒரு நாடாகும். அங்குள்ள மஹ்மூத் ஸாஹிப் என்பவர் மோட்டார் சைக்கிள் மெக்கானிக் ஆக இருக்கின்றார். அவரிடம் மிஷனரி ஸாஹிப், தஹ்ரீகே ஜதீத் சந்தா தொடர்பாக கூறியபோது அவர் தமது பையில் இருந்த மொத்த தொகையையும் எடுத்துக் கொடுத்து விட்டார். அதில் பத்தாயிரம் கினி ஃபிராங் தொகை இருந்தது. அப்போது அவர் வீட்டில் இருந்தார். அவருடைய மருமகள் வீட்டில் சாப்பாடு செலவிற்காக பணம் கேட்டார். மஹ்மூத் ஸாஹிப் மொத்த பணத்தையும் தஹ்ரீகே ஜதீத் சந்தாவில் கொடுப்பதற்கு எண்ணம் கொண்டிருந்தார். அவர் தம்மிடம் இருந்த மொத்த தொகையையும் சந்தாவாக கொடுத்து விட்டார். நீங்கள் பொறுமையாக இருங்கள்! என்று அவர் தம்முடைய மருமகளைப் பார்த்துக் கூறினார். அப்போது அவரின் மருமகள் திரும்பிச் சென்று விட்டார். மருமகளின் (வீட்டுச்) செலவினங்களுக்கு எவ்வாறு பணம் கொடுப்பது என்ற கவலையில் அவர் இருந்தபோது, நீங்கள் அலுவலகத்திற்கு வாருங்கள் என்று அரசாங்கத்தின் ஓர் அலுவலகத்தில் இருந்து அவரிடம் கூறப்பட்டது. அவர் அங்கு சென்றடைந்தபோது, நீங்கள் கடந்த ஆண்டு எங்களுடைய மோட்டார் வாகனங்களை செப்பனிட்டுக் கொடுத்தீர்கள்; அதற்கான தொகையை நாங்கள் கொடுத்திருக்கவில்லை என்று கூறினர். மேலும், ஒரு லட்சத்து தொன்னூறாயிரம் கினிஃபிராங்க் காசோலையை அவரிடம் கொடுத்தனர். காசோலையை வாங்கிக் கொண்ட பிறகு மஹ்மூத் ஸாஹிப் உடனடியாக தமது வீட்டிற்கு வந்தார். பின்னர், அல்லாஹ்வின் வழியில் செலவு செய்ததால் கிடைத்த அருட்களை பாருங்கள்; இந்த தொகையை நான் எதிர்பார்த்திருக்கவில்லை; இதனை என் இறைவன் கொடுக்கச் செய்து விட்டான் என்று தமது மருமகள் மற்றும் வீட்டில் இருந்த மற்றவர்களை அழைத்துக் கூறினார்கள்.

ஃபிஜி நாட்டின் முபல்லிஃக் எழுதுகின்றார்:

அஷ்ஃபாக் என்ற ஒரு நண்பர் கூறினார். பயணத்தின் போது தஹ்ரீகே ஜதீத் தொடர்பான எனது கடந்த வருட குத்பாவை அவர் கேட்டார். மேலும், அதில் நான் கூறியிருந்த சம்பவங்களை கேட்டிருந்தார். அந்த சம்பவங்கள் அவர் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அவர் வாகனம் ஓட்டும் போது பயணத்தின்போதே தஹ்ரீகே ஜதீத் செயலருக்கு ஃபோன் செய்து தம்முடைய தஹ்ரீகே ஜதீத் சந்தாவிற்கான வாக்குறுதியை இரு மடங்காக எழுதிக் கொள்ளுங்கள் என்று கூறினார். அதன் பிறகு அவர் வியாபாரம் செய்தார். வியாபாரத்தினுடைய வருடாந்திர வரவு செலவு கணக்கு அறிக்கை வந்தபோது அந்த ஆண்டு அவருடைய லாபமும் இரு மடங்காக இருந்தது. அதைக் கண்டு அவர் கூறுகின்றார்: இந்த இரு மடங்கு லாபம் என்பது எங்களது முயற்சி மற்றும் உழைப்பினால் கிடைக்கவில்லை.மாறாக,

இந்த சந்தாவை இருமடங்காக உயர்த்தியதன் விளைவாக அல்லாஹ்வின் அருளினால் மட்டுமே கிடைத்தது என்பது எனது நம்பிக்கையாகும்.

மாஸ்கோவின் முபல்லிஃக் எழுதுகின்றார்: கிர்கிஸ்தானைச் சேர்ந்த ருஸ்லான் கிகீயூவ் ஸாஹிப் என்பவர் 14 வருடமாக மாஸ்கோவில் வசிக்கின்றார். இவர் முன்பும் கூட பொருள் தியாகத்தில் கவனம் செலுத்தி வந்துள்ளார். சுமார் ஒரு வருடத்திற்கு முந்தைய பொருள் தியாகம் தொடர்பான எனது குத்பாவை அவர் கேட்டபோது, அவருக்கு அதில் அதிக இன்பம் கிடைத்தது.

அவர் கூறுகின்றார்: தியாகங்கள் செய்யக் கூடிய மக்களுடன் நானும் இணைந்து கொள்கின்றேன் என்று அவர் தொடர்ச்சியாக அன்றாட வருமானத்திலிருந்து சுமார் பத்து சதவிகிதத் தொகையை சந்தாவிற்காக அனுப்பி வைக்க துவங்கினார். சிறிது ஸதகாவிற்காகவும், மற்றவற்றை சந்தாவிற்காகவும் கொடுத்தார். ஒரு வருடம் வரை அவர் இதே வழிமுறையை பின்பற்றி வந்தார். முபல்லிஃக் ஸாஹிபிற்கு வேறு இடத்திற்கு பணிமாற்றம் நிகழ்ந்த போது, நான் எந்த வழிமுறையின் படி சந்தா கொடுத்து வந்தேனோ அதனை என்னால் தொடர முடியுமா? என்பதே இவர் கேட்ட முதல் கேள்வியாக இருந்தது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த புரட்சியைதான் மக்களிடையே உருவாக்கினார்கள். சந்தா கொடுக்க வேண்டும் என்ற ஒரு கவலை அவர்களிடம் காணப்படுகின்றது.

தன்ஸானிய்யாவின் அமீர் ஸாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: அங்குள்ள ஒரு ஜமாஅத்தில் முஹம்மது ஸானீ ஸாஹிப் என்ற ஒரு நபர் இருக்கின்றார். அவர் அங்கு வேலை செய்து வருகின்றார். அவர் வேலை செய்து வந்த கம்பெனிக்கு பொருளாதார இழப்பு ஏற்பட்டு விட்டது. அதன் காரணமாக எல்லா ஊழியர்களின் சம்பளத்தில் இருந்தும் பிடித்தம் செய்யப்படும் என்று முதலாளி கூறிவிட்டார். அதனைக் கேட்ட இவருக்கு மிகுந்த துக்கம் ஏற்பட்டது. தஹ்ரீகே ஜதீத் சந்தாவை செலுத்துவதற்கான கடைசி மாதமாக இருந்தது. முஅல்லிம் ஸாஹிப் இவரை தொடர்பு கொண்டு சந்தா கேட்டபோது, இவர் தனது கஷ்டத்தை வெளிப்படுத்தாமல் இருந்தது மட்டுமின்றி, அல்லாஹ்வின் மீதான முழுமையான நம்பிக்கையை வெளிப்படுத்தியவாறு தனது வாக்குறுதி முழுவதையும் செலுத்தி விட்டார். அவருடைய சம்பளம் பிடித்தம் செய்யப்படாது என்று அடுத்த நாளே அவருடைய முதலாளியிடம் இருந்து ஃபோன் வந்தது. ஆயினும், மற்ற ஊழியர்களின் சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்டது. ஆனால், இவருடைய சம்பளம் முழுமையாக வழங்கப்பட்டது.

அவர் கூறுகின்றார்: நான் தஹ்ரீகே ஜதீத் சந்தாவை முழுமையாக கொடுத்ததன் காரணமாகத் தான் இது நிகழ்ந்தது.

மலாவீ என்ற ஒரு நாடு உள்ளது. அங்கு மங்கோச்சி என்ற மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு வயதான பெண்மணி விவசாயம் செய்து வருகின்றார். அதன் மூலமாகவே அவரது வாழ்க்கை கழிகின்றது. அவர் தஹ்ரீகே ஜதீத் சந்தாவிற்கான வாக்குறுதியை எழுதியிருந்தார். ஆனால், அவரால் சந்தாவை செலுத்த முடியவில்லை. சந்தாவிற்கான நிதியாண்டு முடிவடையும் நேரத்தில், யாராவது வாக்குறுதியை முழுமையாக செலுத்தாமல் இருக்கின்றனர் என்றால், செலுத்துங்கள் என்று நினைவூட்டப்பட்டது. அவர் எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தார். ஏதாவது வேலை கிடைத்தால் அந்த வருமானத்தைக் கொண்டு வாக்குறுதியை முழுமை செய்து விடலாம் என்று அவர் துஆவும் செய்து வந்தார். ஆனால், முயற்சி செய்த பிறகும் அவருக்கு எந்த வேலையும் கிடைக்கவில்லை. ஆக, அவர் பள்ளிவாசலில் அஸர் தொழுகையை தொழுது விட்டு வீட்டை அடைந்தபோது, நாற்பத்தி ஐந்தாயிரம் கவாச்சா தொகையை அவருக்கு அவருடைய மகன் வழிப் பேரன் அன்பளிப்பாக அனுப்பியிருப்பதாக தகவல் கிடைத்தது. கவாச்சா என்பது அந்த நாட்டின் கரன்ஸி ஆகும். ஆகவே அவருடைய ஆனந்தத்திற்கு எல்லையே இருக்கவில்லை. உடனடியாக முஅல்லிம் ஸாஹிபிடம் சென்று தான் கொடுத்த வாக்குறுதியை செலுத்தி விட்டார். தம் வாக்குறுதியை முழுமை செய்யக் கூடிய வாய்ப்பு கிடைத்ததற்காக அவர் மீண்டும், மீண்டும் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தினார்கள்.

ஏழைகள் ஒரு கவலையுடன் சந்தா கொடுப்பதை பாருங்கள்!

தன்ஸானிய்யாவின் அமீர் ஸாஹிப் கூறுகின்றார்கள்: ஷியான்ஙா என்ற இடத்தில் ஒரு ஜமாஅத் உள்ளது. அங்கு மர்யம் ஸாஹிபா என்ற ஒரு பெண்மணி இருக்கின்றார். அவர் கூறுகின்றார்: எனக்கு முஅல்லிம் ஸாஹிப் அவர்களிடம் இருந்து ஃபோன் வந்தது. தஹ்ரீகே ஜதீத் சந்தா பாக்கியைக் குறித்து அவர் எனக்கு கவனமூட்டினார். வீட்டு செலவிற்காக என்னிடம் அப்போது பத்தாயிரம் ஷில்லிங் தொகை இருந்தது. அதை நான் சந்தாவாக கொடுத்து விட்டேன். அல்லாஹ் என்னிடம் எவ்வாறு நடந்து கொண்டான் என்றால் அன்றைய நாளே ஒரு லட்சம் ஷில்லிங்காக அதனை எனக்கு திருப்பி கொடுத்தான். இவை அனைத்தும் சந்தாவின் அருட்களாகும் என்று அவர் கூறுகின்றார்.

கினிபஸாவ் நாட்டைச் சேர்ந்த புதிதாக பைஅத் செய்த உஸ்மான் ஸாஹிப் என்ற ஒரு நபர் இருக்கின்றார். அவருடைய வாழ்வில் பெரும் பொருளாதார கஷ்டங்கள் இருந்து வந்தன. எந்த வியாபாரம் செய்தாலும் அதில் வெற்றிக் கிடைக்காமல் இருந்தது. இதே கவலையில் அவர் இரவில் உறங்கினார். அந்நிலையில் அவர் கூறுகின்றார்: உஸ்மானே! நீ உன்னுடைய சந்தாவை முறையாக செலுத்து! என்ற சப்தம் எனக்கு கேட்டது. காலை கண்விழித்த உடனேயே உஸ்மான் ஸாஹிப் மிஷனரி ஸாஹிபிடம் சென்று தனது கனவைக் கூறினார். அவருக்கு தஹ்ரீகே ஜதீத் மற்றும் இதரச் சந்தாக்களைக் குறித்து மிஷனரி ஸாஹிப் கூறினார். அதனைக் கேட்ட உஸ்மான் ஸாஹிப் உடனடியாக தஹ்ரீகே ஜதீத் சந்தாவை செலுத்தி விட்டார். மேலும், அனைத்து சந்தாக்களுடைய பட்டியலையும் தயார் செய்து முறையாக சந்தாவும் செலுத்த துவங்கினார். அவர் தமது அனைத்து சந்தாக்களையும் முறையாக கொடுக்க ஆரம்பித்த காலத்திலிருந்து அல்லாஹ் அவருடைய அனைத்து வியாபாரத்திலும் அருள் செய்தான். அவருடைய அனைத்து வீட்டுப் பிரச்சனைகளும் நீங்கி விட்டன.

இவை அனைத்தும் தஹ்ரீகே ஜதீத் சந்தா மற்றும் மற்ற சந்தாக்களை கொடுத்தன் அருளேயாகும் என்ற நம்பிக்கை அவருக்கு உறுதியாக உள்ளது. இது அல்லாஹ்வின் நடைமுறையாகும். புதிதாக பைஅத் செய்தவர்களுக்கும் அவன் எவ்வாறு நினைவூட்டுகின்றான் என்று பாருங்கள்! அல்லாஹ்விற்கு எந்த செல்வத்திற்கான தேவையும் இல்லை. அவன் அருளுவதற்காக இவை அனைத்தையும் செய்கின்றான்.

ஆஸ்திரேலியாவின் முரப்பி காம்ரான் ஸாஹிப் இருக்கின்றார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: ஓர் இளைஞர் பத்து வருடங்களாக சந்தா கொடுக்கவில்லை. நான் அவருடன் அமர்ந்து பொருள் தியாகத்தின் அருட்களை குறித்து அவருக்கு கூறினேன். அதன் பிறகு தனது சந்தாவை கொடுக்க ஆரம்பித்தார். அவர் அத்துடன் தனது தஹ்ரீகே ஜதீத் சந்தா மற்றும் வக்ஃபே ஜதீத் சந்தாவையும் கொடுக்க துவங்கிவிட்டார். சிறிது காலம் கழிந்த பிறகு அவருடைய தொலைபேசி அழைப்பு வந்தது. அதில் அவர் கூறினார்: அல்லாஹ்வின் அருளினால் எனக்கு வேலையில் பதவி உயர்வு கிடைத்துள்ளது. இதை நான் முற்றிலும் எதிர்பார்த்திருக்கவே இல்லை. இது அல்லாஹ்வின் வழியில் நான் தியாகம் செய்ததன் விளைவால் மட்டுமே நிகழ்ந்ததாகும்.

எவர் பத்து வருடங்களாக சோம்பலை வெளிப்படுத்தி வந்தாரோ, அவர் இனி நான் ஒருபோதும் சந்தா விஷயத்தில் சோம்பலை வெளிப்படுத்த மாட்டேன் என்று தற்போது கூறுகின்றார்.

கேம்பியாவின் நியாமினா எனும் கிராமம் உள்ளது. அங்கும் உஸ்மான் ஸாஹிப் என்ற ஒரு நண்பர் இருக்கின்றார். தஹ்ரீகே ஜதீத் சந்தா செயலர் அந்த கிராமத்திற்கு சென்றார். பின்னர், இது வெறும் சந்தா திட்டம் மட்டுமே ஆகும் என்று எண்ண வேண்டாம்; மாறாக, இதனுடைய நோக்கங்களில் ஒன்றாக மார்க்க அறிவை வளர்த்துக் கொள்வதும், தப்லீஃக் செய்வதும் இருக்கின்றது என்று அவருக்கு சந்தா செலுத்தும்படி கவனமூட்டியவாறு கூறினார்.

நீங்கள் தஹ்ரீகே ஜதீதில் இணைந்து இருக்கின்றீர்கள் என்றால் பின்னர் சந்தா கொடுத்து விட்டோம்; பணி முடிந்து விட்டது என்று கருதக் கூடாது. சந்தா கொடுத்துள்ளீர்கள் தான். அப்படிப்பட்டவர்கள் தங்களது மார்க்க அறிவையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். மேலும் தப்லீஃக் களத்திற்கும் வரவேண்டும். கடந்த நாட்களில் நான் குத்தாம் மற்றும் அன்ஸார் சகோதரர்களிடம் உறுதி மொழியும் வாங்கினேன். அதையும் கருத்தில் கொள்ளுங்கள். தப்லீஃக் களத்திலும் நாம் மிக அதிகமாக முன்னால் செல்ல வேண்டிய தேவை இருக்கின்றது. பொருள் தியாகம் செய்து விட்டு நாம் நமது கடமையை நிறைவேற்றி விட்டோம் என்று கருதக் கூடாது. தஹ்ரீகே ஜதீதுடைய ஒரு நோக்கம் தப்லீஃக்கும் ஆகும். மாபெரும் நோக்கமாக இதுதான் உள்ளது. இதற்காகத் தான் இந்த சந்தா திட்டம் அறிவிக்கப்பட்டது.

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

அவர் கூறுகின்றார்: அதனைக் கேட்டு நான் மிகவும் தாக்கத்திற்கு ஆளானேன். மேலும் நான் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைய வேண்டும் என்று தீர்மானம் எடுத்ததோடு மட்டுமின்றி இவ்வாறும் எண்ணம் கொண்டேன்.

அதாவது அவர் அப்போது வரை பைஅத் செய்திருக்கவில்லை. தஹ்ரீகே ஜதீத் நோக்கங்களை அறிந்து கொண்ட பிறகு பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்ததோடு மட்டுமின்றி 150 டலாஸி தொகையை தஹ்ரீகே ஜதீத் சந்தா வாக்குறுதியாக கொடுத்து விட்டார். பின்னர் அந்த தொகையை செலுத்தியும் விட்டார்.

தான் சந்தா செலுத்திய பிறகு தன்னுள் ஒரு தூய மாற்றத்தை உணர்வதாக அவர் கூறுகின்றார். நான் அஹ்மதி அல்லாதோருக்கு நான் இஸ்லாம் அஹ்மதிய்யத்தைக் குறித்து தப்லீஃக் செய்து வருகின்றேன். நான் தற்போது முறையாக கட்டாயச் சந்தாவையும் செலுத்தி வருகின்றேன் என்றும் அவர் கூறுகின்றார்.

ஒரு பெண்மணி எழுதுகின்றார்: இவரும் கேம்பியாவைச் சேர்ந்தவர் தான். நான் சந்தா கொடுக்க ஆரம்பித்தது முதல் நான் எனக்குள்ளும், எனது பிள்ளைகளிடமும் ஒரு தூய மாற்றத்தை உணர்கின்றேன். எங்களது ஒவ்வொரு தேவையையும் அல்லாஹ் நிறைவேற்றி தருவதை நாங்கள் காண்கின்றோம்.

அல்லாஹ்விற்காக அவனது வழியில் நன்மை மற்றும் தியாகங்கள் ஆகியவற்றை செய்வது அல்லாஹ்வின் அருட்களுக்கு நம்மை வாரிசுகளாக ஆக்கிக் கொண்டே செல்லும்.

கினிகனாகரி ஒரு ஆஃப்ரிக்க நாடு ஆகும். அங்குள்ள உள்ளூர் மிஷனரி குமாரா ஸாஹிப் கூறுகின்றார். அவர் எந்தக் கிராமத்தில் நியமிக்கப்பட்டிருந்தாரோ அங்கு சந்தாவை வசூல் செய்வதற்காக சுற்றுப் பயணம் செய்தார். புதிதாக பைஅத் செய்திருந்த ஓர் இமாமின் மனைவியிடம் அவர் சந்தா கேட்டபோது, அந்தப் பெண்மணி ஐந்தாயிரம் கினி ஃபிராங் தொகையை சந்தாவாக கொடுத்து வானத்தை நோக்கி கையை உயர்த்தி இவ்வாறு கூறினார்: அல்லாஹ்வே! எங்களிடம் இந்தத் தொகை மட்டுமே உள்ளது; இதை நான் உனது வழியில் கொடுக்கின்றேன்; இதை நீ ஏற்றுக் கொள்வாயாக. இவ்வாறு கூறி அதை சந்தாவாக கொடுத்து விட்டார்.

புதிதாக பைஅத் செய்த பெண்மணியாக இவர் இருந்தார். ஆஃப்ரிக்காவின் தொலை தூரப் பகுதியில் வசிப்பவர் ஆவார்.

உள்ளூர் மிஷனரி ஸாஹிப் கூறுகின்றார்: நான் கிராமத்தில் சுற்றுப் பயணம் செய்து விட்டு திரும்பி வந்தபோது, இன்று நான் அல்லாஹ்வுடன் செய்த வணிகத்தில் எனக்கு மிகுந்த லாபம் கிடைத்து விட்டது என்று ஐயாயிரம் கினி ஃபிராங் சந்தா கொடுத்த அந்தப் பெண்மணி மிகவும் மகிழ்ச்சியுடன் கூறினார். அவர் கூறுகின்றார்: நீங்கள் சென்ற பிறகு எனது ஓர் உறவினர் மூலமாக அல்லாஹ் எனக்கு எம்பதாயிரம் ஃபிராங் கினி தொகையை அனுப்பி வைத்துவிட்டான். அது நான் செய்த தியாகத்தை விட எத்தனையோ மடங்கு அதிகமாகும்.

கினிகனாகரியிலிருந்து உள்ளூர் மிஷனரி ஜாலூ ஸாஹிப் கூறுகின்றார்: தஹ்ரீகே ஜதீத் தொடர்பாக பத்து நாட்கள் கொண்டாடப்பட்டபோது, கோன்தாயா என்ற கிராமத்திற்கு சந்தா வசூல் செய்வதற்காக முஅல்லிம் ஸாஹிப் சென்றடைந்தார். ஷேக்கூ ஸாஹிப் என்ற புதிதாக பைஅத் செய்த ஒருவர் முப்பதாயிரம் ஃபிராங் கினி தொகையை தஹ்ரீகே ஜதீத் சந்தா வகைக்காக வாக்குறுதியாக கொடுத்திருந்தார். சந்தா கொடுக்குமாறு அவருக்கு கவனமூட்டப்பட்டபோது என்னிடம் மொத்தம் முப்பதாயிரம் ஃபிராங் மட்டுமே வீட்டுச் செலவுக்காக உள்ளது. ஆனால், நான் இதை அல்லாஹ்வின் வழியில் கொடுக்கின்றேன். இதை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று அவர் கூறினார். அடுத்த நாள் அந்த நபர் மிகுந்த மகிழ்ச்சியுடன் தொலைபேசியில் அழைத்துக் கூறினார்: அல்லாஹ் எங்களது தியாகத்தை ஏற்றுக் கொண்டு விட்டான். சந்தா செலுத்தி சில மணிநேரமே கழிந்திருந்தது; எனது மகன் எனக்கு மூன்று லட்சம் கினி ஃபிராங்கை வீட்டுச் செலவுக்காக அனுப்பி வைத்துள்ளார் என்று அவர் கூறினார். அவர் கூறுகின்றார்: இந்த சம்பவத்திற்கு பிறகு அல்லாஹ் எனது ஈமானை மிகவும் உறுதிப்படுத்தி விட்டான். எங்களிடம் இருந்து ஜமாஅத் சந்தாவை வசூல் செய்கின்றது என்றால் அது அல்லாஹ்வின் வழியில்தான் செலவு செய்யப்படுகின்றது. இனி நான் இவ்வாறே தியாகம் செய்து வருவேன் என்று அவர் கூறினார்.

தற்போது எப்படிப்பட்ட நிம்மதியை அல்லாஹ் அவருக்கு வழங்கியுள்ளான் என்றால், அந்த சந்தா தொகை சரியான முறையில் செலவு செய்யப்பட்டுள்ளது; அது வீணாகவில்லை என்ற நம்பிக்கை அவருக்கு ஏற்பட்டு விட்டது.

கஸாகிஸ்தானைச் சேர்ந்த ஒரு நண்பர் பைகா மீதூஃப் ஸாஹிப் என்பவர் சந்தாவில் முறையாக பங்கெடுத்து வந்தார் என்று அவர் கூறுகின்றார். ஜூன் மாதத்தில் நான் வேலையில் இருந்து ஓய்வு கொடுக்கப்பட்டு விட்டேன். எனது சம்பளம் முழுவதையும் எனது முதலாளி எனக்கு கொடுத்து இருந்தார். தற்போது நான் ஓய்வூதியம் மட்டுமே பெற்று வருகின்றேன். வேலையை விட்டு வெளியேறிய சில மாதங்களுக்குப் பிறகு சில நோய்களின் காரணமாக விலையுயர்ந்த மருந்துகளையும், மற்ற பொருட்களையும் வாங்க வேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டது. ஆனால், பொருளாதார நிலை சரியில்லாததன் காரணமாக நான் மிகவும் கவலையில் இருந்தேன். அடுத்த நாள் வீதியில் சென்று கொண்டிருந்தேன். எனது கிரிடிட் கார்டை பரிசோதித்துப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு தோன்றியது. எனது கிரிடிட் கார்ட் காலியாகத் தான் இருக்கும். அதில் எதுவும் இருக்காது. அதில் பணம் இருக்க வாய்ப்பில்லை என்றாலும், அதை பரிசோதித்து பார்க்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு தோன்றியது. நான் அதனை பரிசோதித்து பார்த்தபோது எனது வியப்பிற்கு அளவேயில்லை. ஏனெனில், அந்த கார்டில் ஒரு லட்சத்து தொன்னூறாயிரம் உள்ளூர் கரன்சி வரவு வைக்கப்பட்டிருந்தது. நான் வியந்து போய் விட்டேன். அல்லாஹ்விற்கு நான் எண்ணற்ற நன்றிகளை செலுத்திக் கொண்டிருந்தேன். எந்தக் காரணத்தையும் அந்தக் கம்பெனி என்னிடம் கூறாமல் அந்தத் தொகையை எனது கணக்கில் பண பரிமாற்றம் செய்திருந்தது.

அப்போது அவர் கம்பெனிக்கு ஃபோன் செய்து காரணத்தை வினவியபோது, கம்பெனியின் முதலாளி அவருடைய நேர்மை மற்றும் உண்மையின் காரணமாக அன்பளிப்பாக அனுப்பி வைத்திருந்தது அவருக்கு தெரிய வந்தது. இந்த அனைத்தும் தஹ்ரீகே ஜதீத் மற்றும் வக்ஃபே ஜதீத் சந்தாக்களை முறையாக செலுத்தி வந்ததன் விளைவாகும் என்று அவர் கூறுகின்றார்.

மலேசியாவில் இருந்து பாக்ரா என்ற ஒரு நண்பர் கூறுகின்றார்: எனது தனிப்பட்ட அனுபவம் என்னவென்றால், 2016-2017-க்கு இடைப்பட்ட ஆண்டில் நான் தஹ்ரீகே ஜதீதிற்காக ஓராயிரம் நிகட் தொகையை வாக்குறுதியாக கொடுத்திருந்தேன். அக்காலக் கட்டத்தில் நான் என்னுடைய பொருளாதார நிலையின் காரணமாக அந்த வாக்குறுதியை செலுத்த முடியாமல் இருந்தேன். உண்மையிலேயே அந்தநேரத்தில் கஷ்டமாக இருந்தது. என்னுடைய வியாபாரம் பாதிக்கப்பட்டு இருந்தது. நான் கவலையில் இருந்தேன்.வாக்குறுதியை முழுமையாக செலுத்தி விடலாம் என்ற நம்பிக்கையில் இருந்தேன். ஆயினும் அந்த தொகையை திரட்ட முடியாமல் இருந்தேன். எனது எண்ணம் உண்மையானது என்றால், ஜமாஅத் உண்மையில் நிலைத்துள்ளது என்றால் பின்னர் நிச்சயமாக அல்லாஹ் எனக்கு எளிதை உருவாக்கி விடுவான் என்று நான் துஆ செய்து கொண்டிருந்தேன். வாக்குறுதியை செலுத்துவதற்கான கடைசி நாளுக்கு முந்தைய நாள் வியாபாரத்தில் இருந்து ஒரு தொகை வருமானமாக கிடைத்தது. அது எவ்வளவு என்று பார்த்தபோது, ஓராயிரம் நிகட் ஆக இருந்தது. அப்போது நான் எதைக் குறித்தும் சிந்திக்காமல் பொருளாளரின் வீட்டிற்கு சென்றேன். அவரிடம் ஓராயிரம் நிகட் தொகையை கொடுத்து விட்டேன். இந்த சம்பவத்திற்கு பிறகு எனக்கு ஜமாஅத்தின் மீது முழுமையான நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. நமது நோக்கங்கள் ஜமாஅத் மற்றும் இஸ்லாத்தின் முன்னேற்றங்களுக்காக தூய்மையாக இருக்குமென்றால் பின்னர் நிச்சயமாக அசாதாரண முறையில் அல்லாஹ் எளிதை உருவாக்கி விடுவான் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டு விட்டது.

இது உலகில் உள்ள ஒவ்வொரு நாட்டிலும் வசிக்கக் கூடிய அஹ்மதிகளின் சிந்தனையாக இருக்கின்றது. ஒவ்வொருவருக்குமிடையில் ஆயிரக்கணக்கான மைல்கள் தொலைவு உள்ளது. ஆனால், அல்லாஹ் இவ்வாறு ஈமானை உறுதிப்படுத்துகின்றான். ஜமாஅத்தின் உண்மைத்துவத்தையும் அவர்களுக்கு வெளிப்படுத்திக் கொடுக்கின்றான். அவர்களின் ஈமானையும் உறுதிப்படுத்துகின்றான்.

ஜெர்மனியைச் சேர்ந்த நண்பர் ஒருவர் கூறுகின்றார்: என்னுடைய நிறுவனத்தின் பொருளாதாரச் சூழல் மோசமடைந்ததன் காரணமாக பணி நேரம் குறைந்து விட்டது. அதன் காரணமாக எனது வருமானமும் குறைந்து விட்டது. தஹ்ரீகே ஜதீதுடைய கருத்தரங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த நாளில் ஈமானின் மீது ஒளிபாய்ச்சுகின்ற சம்பவங்களை நான் கேட்டுக் கொண்டிருந்தபோது, நான் எனது உள்ளத்தில் இன்னும் கூடுதலாக ஐந்நூறு யூரோ கொடுப்பேன் என்று அல்லாஹ்விடம் வாக்குறுதி செலுத்தி விட்டேன்.

துஆவுக்காக எனக்கும் அவர் கடிதம் எழுதினார். அவரும் துஆ செய்தார். அல்லாஹ் அருள் செய்தான். தஹ்ரீகே ஜதீத் சந்தாவிற்காக வாக்குறுதியாக கொடுத்த தொகையை அவர் முதலில் செலுத்தினார். மேலும், கூடுதலாக ஐந்நூறு யூரோவை செலுத்தக் கூடிய வாய்ப்பும் அவருக்கு கிடைத்தது. சில நாட்களுக்கு பிறகு வேறொரு

நிறுவனத்தில் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. நீங்கள் ஏற்கனவே பணி செய்த நிறுவனத்தின் பணியை விட்டு விட்டு எங்களிடம் வேலை செய்தால் அந்த நிறுவனத்தில் இருந்து உங்களுக்கு கிடைத்த ஊதியத்தை விட ஓராயிரம் யூரோ அதிகமாக கொடுக்கப்படும் என்று கூறப்பட்டது. நான் நன்றாக சிந்தித்துப் பார்த்த பிறகு, இந்த புதிய நிறுவனத்தில் வேலை செய்யலாம் என்று நான் முடிவெடுத்தேன். நீங்கள் பழைய நிறுவனத்தின் பணியை விட்டு விட்டு எங்களிடம் பணி செய்ய வந்துள்ளீர்கள்;எனவே மூன்று மாதம் வரை ஒவ்வொரு மாதமும் தொடர்ச்சியாக இரண்டாயிரம் யூரோவும், மூன்று தவணைகளாக போனஸும் வழங்கப்படும் என்று அந்த நிறுவனத்தின் முதலாளி கூறினார். வேலையைப் பற்றிக் கூறும்போது வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் விடுமுறை வழங்கப்படும் என்றும் கூறினார். இவ்வாறு அல்லாஹ்வின் அருளினால் தஹ்ரீகே ஜதீத் சந்தாவில் அதிகமாக தியாகம் செய்ததன் விளைவாக என்னுடைய வருமானம் அதிகரித்தது மட்டுமின்றி ஜுமுஆ தொழுகையை நிறைவேற்றுவதற்கும் நிரந்தரமான ஏற்பாடு ஆகிவிட்டது.

ஐவரிகோஸ்ட்டின் முபல்லிஃக் எழுதுகின்றார்: தஹ்ரீகே ஜதீதின் சந்தாவை வசூல் செய்வதற்காக யாலோஸோ என்ற பெயர் கொண்ட கிராமத்திற்கு சென்று சந்தாவைக் குறித்து அறிவுறுத்தினோம். வயதான ஒருவர் அவர் மிகவும் ஏழையாக இருந்தார்.அவருடைய பொருளாதார நிலையை கருத்தில் கொண்டு பார்க்கும்போது முந்நூறு ஃபிராங்க் கொடுத்தால் கூட பெரிய விஷயம் தான் என்று நாங்கள் நினைத்தோம். அவர் எழுந்து வீட்டிற்குச் சென்றார். அவர் தன்னுடைய சந்தாவைக் கொண்டு வந்தது மட்டுமின்றி, தனது மகனையும் அழைத்து வந்து அவரிடம் நீயும் சந்தா கொடு என்று கூறினார். அந்த முதியவர் இரண்டாயிரம் ஃபிராங் தொகையை சந்தாவாக கொடுத்தார். அது அவருடைய பொருளாதார நிலையைப் பார்க்கும்போது மிகப் பெரும் தொகையாக இருந்தது. அவருடைய மகனும் ஐநூறு பிராங் கொடுத்தார்.

இதுதான் செல்வத்தை நேசிப்பதைக் காட்டிலும் அல்லாஹ்வின் மார்க்கத்திற்காக தியாகம் செய்யக் கூடிய உணர்வாகும்.

செனிகால் என்பதும் ஆஃப்ரிக்காவின் ஒரு நாடாகும். முஅல்லிம் ஸாஹிப் கூறுகின்றார்:

முஹம்மது அன்ஜாயே ஸாஹிப் என்பவர் ஓர் ஏழையாவார். ஆயினும், ஒரு களங்கமற்ற அஹ்மதி ஆவார். அவருடைய மனைவி நோயாளியாக இருந்தார். மருத்துவர் எழுதிக் கொடுத்த மருந்துகளை வாங்குவதற்கு பதினைந்தாயிரம் ஃபிராங் ஸைஃபா தொகைக்கான தேவை இருந்தது. அந்தத் தொகை அவரிடம் இல்லை. எனவே தனது ஒரு நண்பரிடம் இருந்து கடன் வாங்குவதற்காக அவர் சென்றார். அந்த நண்பரிடம் அவர் கடன் வாங்கினார். அப்போது தொழுகைக்கான நேரம் ஆகியிருந்தது. தொழுகையை நிறைவேற்றுவதற்காக மிஷன் ஹவுஸிற்கு சென்றார். தன்னுடைய மனைவியின் உடல்நலம் தொடர்பாக முஅல்லிம் ஸாஹிபிடம் கூறினார். எனினும் முழுமையான விவரத்தை கூறிவில்லை தான். கூறுவதற்கு முன்பே முஅல்லிம் ஸாஹிப் தன்னுடைய பேச்சை துவங்கி விட்டார். தஹ்ரீகே ஜதீதுடைய பத்து நாள் கொண்டாடப்பட்டு வருகின்றது என்று முஅல்லிம் ஸாஹிப் பேச்சை துவங்கினார். இறை வழியில் தியாகம் செய்யுங்கள்; அல்லாஹ் எளிதை உருவாக்கி விடுவான் என்று கூறினார்.

எவ்வாறு இருப்பினும், அவர் தனது கட்டாய நிலையை எடுத்துக் கூறி இரண்டு, மூன்று நாட்களுக்கு பிறகு நான் செலுத்தி விடுவேன்; தற்போது எனக்கு சில நிர்பந்தமான சூழல் உள்ளது; தற்போது மனைவிக்கு மருந்து வாங்குவதற்காக கடன் வாங்கி வந்துள்ளேன் என்று கூறினார். எவ்வாறு இருப்பினும், அவர் மிஷன் ஹவுஸை விட்டு புறப்பட்டுச் சென்றார். சில நிமிடங்கள் தான் கழிந்திருக்கும். அவர் திரும்பி வந்து விட்டார். அவர் கூறினார்: மிஷன் ஹவுஸிலிருந்து புறப்பட்டபோது முஅல்லிம் ஸாஹிப் என்னிடம் சந்தா தொடர்பாக கூறினாரே ; நான் ஒன்றும் கொடுக்கவில்லையே என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. அதை எண்ணி எனக்கு மிகவும் மனவருத்தம் ஏற்பட்டது. எனவே இந்த ஐந்தாயிரம் ஃபிராங் ஸைஃபா தொகையை தஹ்ரீகே ஜதீத் சந்தாவிற்காக நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள்: நான் அவசியமான மருந்தை மட்டும் வாங்கிக் கொள்கிறேன் என்று கூறிவிட்டு ரசீதைப் பெற்றுக் கொண்டு புறப்பட்டுச் சென்று விட்டார். அவர் மிஷன் ஹவுஸை விட்டு புறப்பட்டு மருந்தகத்தை கூட சென்றடைந்திருக்கவில்லை. அதற்குள் அவருக்கு ஒரு தொலைபேசி வந்தது. ஒரு நபர் கூறினார்: நான் ஒரு கட்டில் வாங்க விரும்புகின்றேன். தங்களுக்கு நான் ஐம்பதாயிரம் ஃபிராங் ஸைஃபா தொகையை கிரிடிட் வங்கியில் ஆர்டர் செய்து தொலைபேசி வாயிலாக பணப் பரிமாற்றம் செய்கின்றேன். உங்களுடைய மனைவியின் உடல்நிலை சரியான பிறகு எனக்கு கட்டில் செய்து கொடுங்கள். மீதத் தொகையை பிறகு நான் கொடுக்கின்றேன் என்று அவர் கூறினார். மருந்தகத்திற்கு சென்று கொண்டிருந்த அவர் அங்கு செல்லாமல் மீண்டும் மிஷன் ஹவுஸிற்கு திரும்பிச் சென்றார். முஅல்லிம் ஸாஹிபிடம் இந்த அனைத்து சம்பவங்களையும் எடுத்துக் கூறினார். சந்தாவின் காரணமாக இறைவன் சிறப்பான முறையில் அருள் செய்துள்ளான்; எனது தேவையை விட எனக்கு அதிகமாக கிடைத்து விட்டது என்று அவர் கூறினார்.

செனிகாலில் முஅல்லிம் ஸாஹிப் கூறுகின்றார்: வாகன் ஸாஹிப் என்ற ஒரு களங்கமற்ற நண்பர் தஹ்ரீகே ஜதீத் சந்தாவாக பத்தாயிரம் கினி பிராங் வாக்குறுதி கொடுத்திருந்தார். தஹ்ரீகே ஜதீத் சந்தா நிதியாண்டு முடிவடைய இருக்கின்றது; உங்களுக்கு சந்தா பாக்கி உள்ளது என்று அவரிடம் கூறப்பட்டது. அதற்கு அவர், தற்போது என்னிடம் பணம் இல்லை ; ஆயினும் நீங்கள் கவலைப்பட வேண்டாம். காலம் முடிவடைவதற்குள் நான் செலுத்தி விடுவேன்; என்னுடைய ஆடைகளை விற்றாவது நான் செலுத்தி விடுவேன் என்று அவர் கூறினார்.

இது அந்த மக்களின் உணர்வாக இருக்கின்றது.

முஅல்லிம் ஸாஹிப் கூறுகின்றார்: சில நாட்களுக்குப் பிறகு அவரே எனது வீட்டிற்கு வந்தார். என்னுடைய தஹ்ரீகே ஜதீத் சந்தாவை வாங்கிக் கொள்ளுங்கள் என்று என்னிடம் கூறினார். சந்தாவை கொடுக்க வேண்டும் என்று மிகுந்த கவலை எனக்கு இருந்தது. இன்று எனது மகள் நான் எதிர்பார்க்காத வகையில் எனக்கு பணத்தை அனுப்பி விட்டார்; எனவே முதலில் நான் சந்தா கொடுப்பதற்காக வந்து விட்டேன் என்று அவர் கூறினார்.

இவ்வாறான தூய்மையான மக்கள் ஜமாஅத்தில் இருக்கின்றனர். எந்தவொரு விஷயத்தையும் அவர்கள் பொருட்படுத்துவது கிடையாது.

நைஜீரியாவின் அமீர் ஸாஹிப் கூறுகின்றார்கள்: இங்கு ஒரு முஅல்லிம் ஸாஹிப் இருக்கின்றார். அவருடைய மனைவி குடும்பத்தை பராமரிக்கும் பெண்மணி ஆவார். அவருக்கு எந்தவொரு வருமானமும் கிடையாது. முஅல்லிம் ஸாஹிப் தான் அவருடைய சந்தாவையும் செலுத்தி வருகின்றார். இது பற்றி அவருடைய மனைவிக்கு தெரிய வந்தபோது இந்த வருடம் எனது சந்தாவை நானே கொடுத்துக் கொள்கிறேன். எட்டாயிரம் ஃ.பிராங் ஸைஃபா தொகையை என்னுடைய வாக்குறுதியாக எழுதிக் கொள்ளுங்கள் என்று அவர் கூறினார். நீங்கள் எவ்வாறு இதனை கொடுப்பீர்கள் என்று அவருடைய கணவரான முஅல்லிம் ஸாஹிப் கேட்டபோது, என்னுடைய தியாகத்தை அல்லாஹ் ஏற்றுக் கொள்வான் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது என்று அவர் கூறினார். பிறகு அவ்வாறே நிகழ்ந்தது. சில நாட்கள் கழிந்த பிறகு அருகில் வசிக்கும் ஒரு பெண்மணி உங்களுக்கு ஆடைகள் தைக்க தெரியுமா? என்று கேட்டார். மேலும், என்னுடைய துணிகளை தைத்து தாருங்கள் என்று கூறி அத்துடன் மூவாயிரம் கினி ஃபிராங் தொகையை முன் பணமாகவும் கொடுத்து விட்டார். அதனை அவர் உடனடியாக தஹ்ரீகே ஜதீத் சந்தாவில் செலுத்தி விட்டார். அதன் பிறகு அவருக்கு எந்த அளவிற்கு வேலைகள் வந்தன என்றால், அதன் மூலம் தனது சந்தாவை மிகவும் எளிதாக செலுத்தி விட்டார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த திட்டத்தை ஆரம்பித்தபோது, தாங்கள் எங்களிடம் ஐந்து ரூபாய் அல்லது பத்து ரூபாய் கொடுங்கள் என்று கேட்டுள்ளீர்கள். ஒரே தவணையாக எங்களால் இந்த தொகையை கொடுக்க முடியாது; எனவே மாதம் ஒரு ரூபாய் இரண்டு ரூபாயை நாங்கள் செலுத்துகின்றோம். தாங்கள் எங்களுக்கு அதற்கான அனுமதியை வழங்குங்கள் என்று அப்போது இருந்த பெண்கள் அன்னாரிடம் கேட்டனர். அப்போது வெளிப்படுத்தப்பட்ட உணர்வு இன்றும் நிலைத்திருக்கின்றது. நூற்றுக் கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள மக்களிடமும் இந்த உணர்வு காணப்படுகின்றது. கலீஃபாவுடைய நேரடியான குரலை அவர்கள் கேட்கின்றனர் தான். ஆனால், அவர்களுக்கு புரிவதில்லை. அவர்களுள் பலருக்கு அந்த மொழியும் புரிவதில்லை.ஆனால், தூய்மையில் முன்னேறி இருக்கின்றனர்.

செனிகாலில் இருந்து முஅல்லிம்

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

ஸாஹிப் எழுதுகின்றார்: தாம்பாகுன்டா என்ற இடத்தில் உள்ள ஜமாஅத்தில். ஸஃபீதீ ஸாஹிப் இருக்கின்றார். அவரிடத்தில் சொந்தமான ஆடு மற்றும் மாட்டு மந்தை உள்ளது. அவர் ஒருநாள் தொலைபேசியில் அழைத்து, தஹ்ரீகே ஜதீத் என்றால் என்ன? என்று கேட்டார்.

தஹ்ரீகே ஜதீத் சந்தா கொடுக்க வேண்டும் என்று அவர் கேள்விபட்டு இருப்பார். முஅல்லிம் ஸாஹிப் அவருக்கு விளக்கமாக அதனைக் குறித்து கூறினார். அந்நாட்களில் தஹ்ரீகே சந்தா தொடர்பாக பத்து நாட்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன என்றும் அவரிடம் கூறப்பட்டது. அவருடைய தந்தை பெரும் செல்வந்தராக இருந்தார். ஆனால், அவர் தனது ஸகாத் மற்றும் இறை வழியில் செலவு செய்யும் விஷயத்தில் மிகவும் பலவீனமாக இருந்தார். ஆயினும், மவ்லவிகளுக்காக சந்தா கொடுத்து வந்தார் என்று அவர் கூறினார். அவருடைய தந்தையின் மரணத்திற்கு பிறகு போதுமான அளவுக்கு கால்நடைகள் இவருடைய பங்கில் வந்தன. ஆனால், இவருக்கும் இறைவழியில் செலவு செய்வதன் பக்கம் கவனம் உருவாகவில்லை. ஆனால், முஅல்லிம் ஸாஹிப் அவர்கள் இவருக்கு ஸகாத் மற்றும் இதர சந்தாக்களின் பக்கம் கவனமூட்டியபோது, அவர் ஒரு பசுமாட்டையும் இரண்டு செம்மெறி ஆடுகளையும் சந்தாவுக்காக கொடுத்தார். மேலும், ஒரு செம்மெறி ஆடு குறிப்பாக தஹ்ரீகே ஜதீத் சந்தா வகைக்கு என்று அவர் கூறினார். சில நாட்கள் கழித்து அவருக்கு ஒரு கனவு வந்தது. கால்நடைகளுக்கு குறிப்பான ஒரு தொற்றுநோய் பரவுகின்றது; அதன் காரணமாக உடலில் இருந்து நீர் வெளியேறி விடும். கால்நடைகள் இறந்து விடும் என்று கூறப்பட்டது. ஒரு மந்தைக்கு முதலாளியாக அவர் இருந்தார். தன்னிடமும் கால்நடைகள் உள்ளனவே என்று அவர் கனவில் மிகவும் கவலைப்பட்டார். துஆவும் செய்தார். இறைவா! என்னுடைய கால்நடைகளை பாதுகாப்பாயாக என்று துஆவும் செய்தார். அப்போது கனவிலேயே, உரத்த குரலில் தஹ்ரீகே ஜதீத் சந்தாவின் காரணமாக உமது கால்நடைகள் பாதுகாக்கப்படும் என்று அவரிடம் கூறப்பட்டது. அந்தக் கனவிலேயே அவர் ஒரு காகிதத்தை பார்த்தார். அதில் முதல் வரியில் பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் என்று எழுதப்பட்டிருந்தது. அதில் அவருடைய பெயரும் எழுதப்பட்டிருந்தது. அவர் கண் விழித்தபோது முஅல்லிம் ஸாஹிபிற்கு ஃபோன் செய்தார். கனவைக் கூறினார். உங்களுக்கு கொடுக்கப்பட்ட ரசீதைப் பாருங்கள்; அதில் முதல் வரியும் பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் என்று எழுதப்பட்டுள்ளது; நீங்கள் படியுங்கள். அதற்கு கீழே உங்களுடைய பெயரும் எழுதப்பட்டுள்ளது என்றும் முஅல்லிம் ஸாஹிப் கூறினார். அதற்கு கீழே தஹ்ரீகே ஜதீத் சந்தா என்று எழுதப்பட்டிருந்தது.

ஆக, எவ்வாறு இருப்பினும் அவர் கூறுகின்றார்: நான் ரசீதைப் பார்த்த போது கனவில் நான் பார்த்தது நினைவுக்கு வந்தது. நிச்சயமாக இது எனது ஈமானை வலுப்படுத்துவதற்கு காரணியாக அமைந்தது என்று அவர் கூறுகின்றார். விநோதமான வழிமுறைகளின் மூலமாக அல்லாஹ்வும் எவ்வாறு வழிகாட்டுகின்றான் என்று பாருங்கள்!

ஷியான்கோ, தன்ஸானியாவின் முஅல்லிம் ஸாஹிப் எழுதுகின்றார். ஒரு ஜமாஅத்தில் உள்ள புதிதாக பைஅத் செய்த ரமலான் ஸாஹிப் என்பவர் தஹ்ரீகே ஜதீத் சந்தாவிற்காக குறிப்பிட்ட ஒரு பெரும் தொகையை வாக்குறுதியாக கொடுத்தார். அவருடைய வாழ்வாதாரமாக விவசாயம் இருந்தது. மழை பொழியாததன் காரணமாக பல விவசாயிகளின் நிலங்களில் பயிர்களின் விளைச்சல் நன்றாக இருக்கவில்லை. ரமலான் ஸாஹிப் கூறுகின்றார்: தஹ்ரீகே ஜதீதில் நான் கொடுத்த வாக்குறுதியை எவ்வாறு முழுமை செய்வது? என்று எல்லாநேரமும் அதே கவலையில் தான் இருந்தேன். அதே சிந்தனையில் இருந்தபோது ஒருநாள் அவரின் ஓர் அன்பருடைய ஃபோன் வந்தது. அவருடன் நீண்ட காலமாக தொடர்பு இல்லாமல் இருந்தது. அந்த அன்பர் கூறினார்: நான் உங்களுக்காக சிறிது தொகையை அனுப்பி வைக்கின்றேன். நீங்கள் உங்களது வீட்டுச் செலவிற்காக, உணவிற்காக பொருட்களை வாங்கிக் கொள்ளுங்கள் என்று கூறினார். அவருக்கு அந்த தொகை கிடைத்த உடன் அவர் நேரடியாக பொருளாளரிடம் சென்றார்; தான் கொடுத்த வாக்குறுதியை செலுத்தினார். சற்று கூடுதலாகவும் சந்தா கொடுத்தார். இந்த அனைத்தையும் அல்லாஹ் எனது உதவிக்காக வழங்கியுள்ளான். அதன் மூலமாக நான் எனது தஹ்ரீகே ஜதீதுடைய வாக்குறுதியை செலுத்த வேண்டும் என்பதற்காக அல்லாஹ் அவ்வாறு செய்துள்ளான் என்று அவர் கூறினார்.

ஆக, புதிதாக இணையக் கூடிய மக்களின் தியாகங்களின் தரமாக இது உள்ளது. ஒரு பக்கம் ஜமாஅத்தின் எதிரிகள் ஜமாஅத்தை அழிப்பதற்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர். மற்றொரு பக்கம், அல்லாஹ் புதிய அஹ்மதிகளின் உள்ளங்களில் தியாகங்களுக்கான உணர்வை உருவாக்கி வருவதையும் நம்மால் காண முடிகின்றது. பின்னர் அவன் அவர்களுக்கு அருளவும் செய்கின்றான். எதிரிகள் தங்களது வாய் பேச்சுக்களால் அல்லாஹ்வின் விளக்கை ஊதி அணைத்து விட முடியுமா என்ன? அவர்கள் எவ்வளவு முடியுமோ அவ்வளவு அழுத்தம் கொடுக்கட்டும். தோல்வி மட்டுமே எதிரிகளுக்கு விதிக்கப்பட்டுள்ளது. உலகின் மூலை முடுக்குகளில் எல்லாம் ஜமாஅத் தியாகங்களின் முன்மாதிரிகளை நிலைநாட்டியவாறு முன்னேறிக் கொண்டே செல்கின்றது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் தஹ்ரீகே ஜதீத் திட்டத்தை துவங்கியதன் காரணம் இதுவாகும். அதாவது, ஜமாஅத்திற்கு எல்லா புறமும் எதிர்ப்பு ஏற்பட்டது; எந்த அளவு என்றால் அரசாங்க எதிரிகளும் பின்னால் இருந்து கொண்டு வேலை செய்து கொண்டிருந்தார்கள். எனவே தஹ்ரீகே ஜதீதுடைய நோக்கமே என்னவென்றால் தப்லீஃக் செய்து ஜமாஅத்தை வளர்க்க வேண்டும்; ஒவ்வொரு நாட்டிலும் ஜமாஅத்தின் மூலமாக இஸ்லாத்தின் கொடி பறக்க வேண்டும் என்பதாகும். எனவே அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மூலமாக இஸ்லாத்தின் மடியில் வந்த மக்கள் ஈமான் மற்றும் தியாகங்களுக்கான முன்மாதிரிகளை நிலைநாட்டுவதற்கு முயற்சி செய்து வருகின்றனர். எண்ணற்ற சம்பவங்கள் இருக்கின்றன. அவை அனைத்தையும் தற்போது இங்கு எடுத்துரைக்க முடியாது. தஹ்ரீகே ஜதீத் தொடர்பாக கூடுதலாக அதன் வரலாறு மற்றும் பின்னணியை பற்றி நான் எடுத்துரைக்க விரும்புகின்றேன். நான் முன்னரே கூறியதுபோன்று ஜமாஅத்திற்கு எதிராக நாலாபுறமும் கூச்சலும், குழப்பமும் எழுந்து கொண்டிருந்தது. அஹ்ராரீகள் எனும் பிரிவினர் குழப்பத்தை உருவாக்குவதற்காக தங்களது முழு அழுத்தத்தையும் கொடுத்தனர். அஹ்மதிய்யத்தை பூமியில் இருந்து துடைத்து எறிந்து விடுவோம்; காதியானின் பெயரையும், அடையாளத்தையும் அழித்து விடுவோம்; காதியானை நிர்மூலமாக்கி விடுவோம் என்பதே அவர்களின் முழக்கமாக இருந்தது. எந்த அளவுக்கு என்றால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அருளுக்குரிய கல்லறை மற்றும் புனித ஸ்தலங்களை அவமதிப்பதற்கு திட்டங்களை கூட தீட்டி விட்டனர். அரசாங்கம் புறமிருந்தும் எதிரிகள் புறமிருந்தும் அதிகமான கவனம் இதன் பக்கமே இருந்தது. ஆங்கிலேயேர்களின் ஆட்சி இருந்தபோதிலும், குழப்பங்களுக்கு முடிவு கட்டுவதற்கு பகரமாக அவர்களுக்கு ஆதரவு கொடுக்கப்பட்டு வந்தது. இந்நிலையில், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஜமாஅத்திற்கு முன்னால் ஒரு திட்டத்தை எடுத்து வைத்தார்கள். பொருள் தியாகத்தின் பக்கம் கவனமூட்டினார்கள். இது 1934-ம் ஆண்டு நிகழ்ந்த விஷயமாகும். நவம்பர் மாதத்தில் அன்னார் (ரலி) சில குத்பாக்களை கொடுத்தார்கள். அதில் முன்னுரையாகவும், பின்னணியாகவும் சில விஷயங்களை எடுத்துக் கூறி தாம் ஏன் இந்த திட்டத்தை முன் வைக்கின்றார்கள் என்று அன்னார் (ரலி) கூறினார்கள். அன்னார் (ரலி) முழுமையாக எடுத்துரைக்கவில்லை. வெறும் ஆரம்பம் மட்டுமே செய்திருந்தார்கள். அப்போது ஜமாஅத்தில் இருந்த தூயவர்கள் எல்லா வகையான தியாகங்களை செய்வதற்கும் ஆயத்தமாக இருப்பதாகவும் அன்னாருக்கு கடிதங்கள் எழுத துவங்கி விட்டனர். அதைக் கண்டு அன்னார் (ரலி) தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியவாறு கூறினார்கள்; இந்த விளக்கத்தை நான் ஏன் கூறுகின்றேன் என்றால், அனைவரும் தயாராக வேண்டும். ஏனெனில், சிலநேரங்களில் நீண்ட காலம் தியாகங்கள் செய்ய நேரிடுகின்றது. பெண்களும், குழந்தைகளும் அதற்காக தயாராக வேண்டியது வருகின்றது. இது ஆண்களுடைய பணி மட்டும் கிடையாது; பெண்களும் தங்களது பொறுப்புகளை புரிய வேண்டியது இருக்கின்றது.

அந்தத் திட்டம் அப்போது ஒவ்வோர் அஹ்மதிக்கும் வலியுறுத்தப்படவில்லை தான். ஆயினும், தூய்மை மற்றும் நன்றியுணர்வின் அசாதாரண வெளிப்பாட்டை அப்போது ஜமாஅத் வெளிப்படுத்தியது. எவ்வாறு இருப்பினும், 1934-ம் ஆண்டு அன்னார் (ரலி) முறையாக ஒரு சந்தா திட்டத்தை அறிவித்தார்கள். எதிரிகளுடைய சதித் திட்டங்களுக்கு நாம் பதிலடி கொடுக்க வேண்டும்; ஆயினும், அவர்களைப் போன்று குழப்பம் செய்வதன் மூலம் கிடையாது; மாறாக, நாம் தப்லீஃக் செய்து பதிலடி கொடுக்க வேண்டும். ஏனெனில், நாம் முழுமையான முறையில் தப்லீஃக்கிற்குரிய உரிமையை நாம் வழங்காததன் விளைவாகவே எதிரிகளுக்கு இந்த வாய்ப்பு கிடைத்துள்ளது. தப்லீஃக் தொடர்பாக எந்த அளவுக்கு நிதானமாக சிந்தித்து திட்டம் வகுத்திருக்க வேண்டுமோ அந்த அளவு நாம் செய்யவில்லை. அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை உலகின் மூலை முடுக்குகள் வரை எட்ட வைப்பதற்காக எந்த அளவிற்கு நாம் முயற்சி செய்திருக்க வேண்டுமோ அந்த அளவிற்கு செய்யப்படவில்லை. எந்த அளவிற்கு அதற்குரிய உரிமைகள்

செலுத்தப்பட்டிருக்க வேண்டுமோ அந்த அளவிற்கு செலுத்தப்படவில்லை என்று அன்னார் (ரலி) கூறினார்கள்.

அன்னார் (ரலி) அப்போது ஜமாஅத்திற்கு முன் ஒரு திட்டத்தை முன் வைத்தார்கள். அதில் நமது சீர்திருத்தம் மற்றும் தியாகங்களின் தரத்தை உயர்த்துவது போன்ற விஷயங்களின் பக்கம் கவனமூட்டப்பட்டிருந்தது. பொருள் தியாகத்தின் பக்கமும் அதில் கவனமூட்டப்பட்டிருந்தது. இருபத்தி ஏழாயிரம் ரூபாய் கொடுக்கப்பட வேண்டும்; அது மூன்று வருடங்களுக்குள் ஒன்று திரட்டப்பட வேண்டும் என்றும் அன்னார் (ரலி) கூறினார்கள். ஆனால், தூய்மை, மற்றும் நன்றியுணர்வினால் நிறைந்திருந்த இந்த ஜமாஅத்திற்கு அல்லாஹ் தனது அருளினால் கலீஃபாவின் குரலுக்கு செவி சாய்ப்பதற்கு நற்பேறை வழங்கியவாறு ஒரே வருடத்தில் ஒரு லட்சம் ரூபாய் கொடுப்பதற்கான நல்வாய்ப்பையும் வழங்கி விட்டான். அப்போது இருந்த ஜமாஅத்தின் பொருளாதார நிலைமையை வைத்து பார்க்கும்போது அது மாபெரும் தியாகமாக இருந்தது. சில அனாக்களில் மட்டுமே அப்போது சந்தா கொடுக்கப்பட்டு வந்தது. அந்த பொருள் தியாகத்தில் பங்கெடுத்தவர்கள் தம்முடைய வாய், வயிற்றைக் கட்டி, தங்களது பிள்ளைகளின் வாய், வயிற்றைக் கட்டி தியாகங்கள் செய்து முன்மாதிரிகளை நிலைநாட்டினார்கள். அல்லாஹ் அவற்றை எவ்வாறு ஒப்புக் கொண்டான் என்றால் உலகில் தப்லீஃக்கிற்கான அசாதாரண வழிகள் திறந்தது மட்டுமின்றி, தியாகங்கள் செய்த இந்த மக்கள் வரை மட்டுமே இதை வரையறுக்காமல் இன்றும் அவ்வாறான முன்மாதிரிகளை அல்லாஹ் நமக்கு காட்டிக் கொடுக்கின்றான். நான் சில சம்பவங்களை எடுத்துரைத்துள்ளேன். எவ்வாறு இருப்பினும், பொருள் தியாகம் செய்த அந்த மக்கள் மார்க்கத்திற்காக தங்களது வாழ்வையும் அர்ப்பணித்தார்கள். தொலை தூரங்களில் இருக்கும் நாடுகளுக்கெல்லாம் அவர்கள் தப்லீஃக் செய்வதற்காக சென்றார்கள். சிறைகளில் அடைபட்டு துயரப்பட்டார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஆரம்ப காலத்தில் இந்த திட்டத்தை பத்து வருடங்களுக்காக மட்டுமே நீட்டித்தார்கள். முதலில் மூன்று வருடமாக இருந்தது. பின்னர் பத்து வருடமாக நீட்டித்தார்கள். பின்னர் பத்து வருடம் முழுமையானதற்கு பிறகு அதனால் நல்ல விளைவுகள் வெளிப்பட்டதையும் கண்டு, மேலும் தியாகம் செய்தவர்களின் கருத்துகளையும் கருத்தில் கொண்டு அதனுடைய காலத்தை நீட்டித்தார்கள். பின்னர் இந்த சந்தா திட்டம் நிரந்தரமான சந்தா திட்டமாக ஆகிவிட்டது. இன்று நாம் அல்லாஹ்வின் உதவி மற்றும் ஒத்தாசைகளுக்கான காட்சிகளை பார்க்கின்றோம் என்றால் அது ஆரம்ப கால மக்களுடைய தியாகங்களின் விளைவே ஆகும். அதனை அல்லாஹ் ஏற்றுக் கொண்டான். இன்னும் கூறுவதென்றால், தற்போதும் புதிதாக இணையக் கூடியவர்களுக்கு சில நேரங்களில் கனவுகளின் மூலமாக இந்தத் திட்டத்தில் இணைந்து பொருள் தியாகம் செய்வதன் பக்கம் கவனமூட்டப்படுகின்றது. நான் ஒரு சில சம்பவங்களையும் எடுத்துக் கூறினேன். ஆரம்ப கால தியாகங்களில் பங்கெடுத்தவர்களின் சந்ததிகள் இன்று தங்களது முன்னோர்களின் தியாகங்களை நினைவுகூர்ந்தவாறு தாங்களும் தியாகங்களில் பங்கெடுத்தவாறு தங்களது சந்ததிகளிடத்திலும் தியாகத்தின் இந்த தொடரை தொடரச் செய்ய வைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதேபோன்று தங்கள் மீது இருக்கின்ற அல்லாஹ்வின் அருளை அதிகமாக கருத்தில் கொண்டவாறு தாங்களும் அதிகமான தியாகங்களை செய்ய வேண்டும்.

எவ்வாறு இருப்பினும்,இந்த திட்டத்தின் துவக்கத்தில் இணைந்த அந்த மக்களுடைய எண்ணிக்கை ஐந்தாயிரமாக இருந்தது. இவர்கள் தஹ்ரீகே ஜதீத் திட்டத்தின் முதல் பதிவேட்டின் முஜாஹித்கள் ஆவர்.பின்னர் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் இதன் பக்கம் குறிப்பாக கவனமூட்டியவாறு ஆரம்ப கால தியாகிகளின் பிள்ளைகள் மற்றும் சந்ததிகள் அவர்களின் தியாகங்களை உயிர்ப்புடன் வைத்தவாறு கியாமத் வரை அவர்கள் சார்பாக சந்தா கொடுத்து வரவேண்டும் என்று கவனமூட்டினார்கள். பின்னர், நான் ஐந்தாவது பதிவேட்டினை துவங்கியபோதும் இதன் பக்கம் குறிப்பாக கவனமூட்டினேன். தற்போது அல்லாஹ்வின் அருளினால் இந்த அனைத்து பதிவேடுகளும் செயல்பாட்டில் இருக்கின்றன. முதல் பதிவேட்டின் அலுவலகத்தில் பங்குபெற்ற முஜாஹித்களுக்கு பத்து வருடம் முழுமையடைந்தபோது இரண்டாம் பதிவேட்டினை அறிவித்தார்கள். பிற்காலத்தில் வந்த மக்கள் அதில் இணைந்து கொண்டனர். அதற்கான காலக் கெடுவாக அன்னார் (ரலி) பத்தொன்பது ஆண்டுகளை நிர்ணயித்தார்கள். இனி இந்த பதிவேடு பத்தொன்பது ஆண்டுகளுக்கு ஒருமுறை விரிவுபடுத்தப்பட்டுக் கொண்டே செல்லும் என்றும் கூறினார்கள். பத்தொன்பது ஆண்டுகளுக்கு பிறகு அடுத்த பதிவேடு ஆரம்பமானது. இந்த அடிப்படையில் பார்க்கும்போது மூன்றாம் பதிவேட்டினை ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் துவங்கி வைத்தார்கள். 1964-ம் ஆண்டே பத்தொன்பது ஆண்டுகள் நிறைவடைந்து விட்டது தான். ஆனால், ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்த காரணத்தினால் அந்நேரத்தில் அன்னார் (ரலி) அதனை அறிவிக்கவில்லை. எனவே மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அதனை அறிவித்தார்கள். அப்போது, ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) கூறினார்கள்: இப்போது நான் இந்த அறிவிப்பை செய்கின்றேன் என்றாலும், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் சார்பாக செய்யப்படுகின்றது. அல்லாஹ் எனக்கும் அதற்கான நற்கூலியை வழங்குவானாக. 1966-ம் ஆண்டு இது அறிவிக்கப்பட்டது. 1965-நவம்பர் முதலே இது ஆரம்பமாகிவிட்டதாக அன்னார் (ரஹி) அறிவித்தார்கள். பின்னர், 1985-ம் ஆண்டு நான்காம் பதிவேடு துவங்கியது. அதனை நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் துவக்கி வைத்தார்கள். இந்த அடிப்படையில் பத்தொன்பது ஆண்டுகள் கழிந்த பிறகு 2004-ம் ஆண்டு இந்த காலக் கெடு முடிந்த உடன் நான் ஐந்தாம் பதிவேட்டினை ஆரம்பித்து வைத்தேன். இன்று 19 ஆண்டுகள் நிறைவடைந்ததையடுத்து ஆறாம் பதிவேட்டிற்கான அறிவிப்பை நான் செய்கின்றேன். புதிதாக இணையக் கூடிய புதிய அஹ்மதிகள், புதிதாக பிறக்கக் கூடிய குழந்தைகள் அல்லது இது வரை முந்தைய பதிவேட்டில் இணையாதவர்கள் ஆறாம் பதிவேட்டில் இணைவார்கள். ஜமாஅத் அமைப்பு இதற்கேற்ப தத்தமது ஜமாஅத்துகளில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் புதிய பதிவேட்டினை அறிவித்த போது கூறினார்கள்: இதற்கு பிறகு, அதாவது இரண்டாம் பதிவேட்டிற்கு பிறகு தஹ்ரீகே ஜதீதுடைய மூன்றாம் பதிவேடு, நான்காம் பதிவேடு மற்றும் ஐந்தாம் பதிவேடுகள் வரும். மார்க்கத்திற்காக நாம் தியாகங்களை செய்து கொண்டே செல்வோம். மார்க்கத்திற்காக முயற்சி செய்வதை எந்த நாளன்று நாம் விட்டு விடுவோமோ; முதலாம் பதிவேட்டினைச் சேர்ந்தவர்களும் சென்று விட்டார்கள். இரண்டாம் மற்றும் மூன்றாம் பதிவேட்டினைச் சேர்ந்தவர்களும் சென்று விட்டார்கள்; நான்காம் பதிவேட்டினைச் சேர்ந்தவர்களும் சென்று விட்டார்கள். ஐந்தாம் பதிவேட்டினைச் சேர்ந்தவர்களும் சென்று விட்டார்கள்; ஆறாம் பதிவேட்டினைச் சேர்ந்தவர்களும் சென்று விட்டார்கள்; ஏழாம் பதிவேட்டினைச் சேர்ந்தவர்களும் சென்று விட்டார்கள்; நாம் எது வரை இந்த தியாகங்களை செய்து கொண்டே இருப்பது; எப்போதாவது இதனை நிறுத்தி தானே ஆக வேண்டும் என்று கூறக் கூடியவர்கள் நம்மிடம் தோன்றி விடும் போது நமது ஆன்மிகம் தணிந்து விட்டது; மற்றும் நமது ஈமான் பலவீனமாகிவிட்டது என்று கூறுபவர்களின் கூற்றாக அது இருக்கும். தஹ்ரீகே ஜதீதின் இந்தக் காலகட்டம் முடிவுறாத காலகட்டமாக இருக்கும் என்பது நமது நம்பிக்கையாகும். வானத்தின் நட்சத்திரங்கள் எண்ணிப் பார்க்கப் படாததவையாக இருப்பதைப் போன்று தஹ்ரீகே ஜதீதுடைய காலகட்டமும் எண்ணிப் பார்க்கப்படாது.

ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களிடம் உங்களின் சந்ததிகள் எண்ணிப் பார்க்க முடியாத அளவிற்கு பல்கிப் பெருகி விடும் என்று இறைவன் கூறினான். ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் சந்ததிகள் பல்வேறு மார்க்கப் பணிகளை செய்தது போன்று தஹ்ரீகே ஜதீதின் நிலையும் இருக்கும். தஹ்ரீகே ஜதீதுடைய காலகட்டம் என்பது மக்கள் இருப்பதால் இருக்கின்றது என்பதன்று. மாறாக, இவை மார்க்கத்திற்காக தியாகங்களை செய்வதற்கான ஏற்பாட்டின் திரள்களாகும். எனவே இந்தக் காலகட்டம் எண்ணிப் பார்க்கப்படவில்லை என்றால் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்திற்கான மகத்தான அடித்தளமாக இது அமைந்து விடும். ஆக, இந்த சிந்தனையுடன் ஒவ்வோர் அஹ்மதியும் தமது தியாகங்களை முன் வைக்க வேண்டும். தியாகம் செய்யக் கூடியவர்களுக்கு அல்லாஹ் எவ்வாறு அருளுகின்றான் என்பது பற்றி நான் சில சம்பவங்களை எடுத்துரைத்திருந்தேன். தஹ்ரீகே ஜதீத் இறைத் திட்டம் ஆகும் என்பதற்கு அல்லாஹ்வின் செயல் சாட்சியாக இருக்கின்றது.

அதே போன்று தஹ்ரீகே ஜதீத் தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறும் கூறினார்கள். இதனை வஸிய்யத் அமைப்புடன் இணைத்தவாறு கூறினார்கள். அதனை நான் எனது சொற்களில் கூறுகின்றேன்: தஹ்ரீகே ஜதீத் என்பது வஸிய்யத் அமைப்பின் முன்னோடியாக உள்ளது என்று கூறினார்கள். அதாவது இதன் காரணமாக வஸிய்யத் அமைப்பு முழுமையடைந்து விடும்.பொருள் தியாகம் செய்வதற்குரிய பழக்கத்தை இது உருவாக்கி விடும். இது வஸிய்யத்திற்கு

முன்னால் சென்று தகவல் கொடுக்கக் கூடியதாக இருக்கின்றது. ஒரு மாபெரும் அமைப்பு பின்னால் வந்து கொண்டிருக்கின்றது; அது வஸிய்யத் அமைப்பு என்று அழைக்கப்படுகின்றது என்று மக்களுக்கு அறிவித்துக் கொண்டே செல்கின்றது. வஸிய்யத் அமைப்பில் இணையுமாறு 2005-ம் ஆண்டில் நான் கவனமூட்டியிருந்தேன். ஏனெனில் வஸிய்யத் அமைப்புடன் கிலாஃபத்திற்கும் ஆழமான தொடர்பு உள்ளது. தற்போது வஸிய்யத் அமைப்புடன் தான் தியாகங்களின் தரங்கள் அதிகரித்துக் கொண்டே செல்ல இருக்கின்றன. எனவே முதலில் தியாகங்களுக்கான பழக்கத்தை உருவாக்கவே தஹ்ரீகே ஜதீத் உள்ளது. ஆகவே இதன் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும். செல்வச் செழிப்பு கொண்ட ஒவ்வொருவருக்கும் இதன் பக்கம் கவனம் செலுத்தக் கூடிய நற்பேறை அல்லாஹ் வழங்குவானாக. அல்லாஹ்வின் அருளினால் நன்றாக சம்பாதிக்கக் கூடிய சிலரும் இதன் பக்கம் கவனம் செலுத்துகின்றார்கள் தான். ஆனால், தம்முடைய வருமானத்திற்கேற்ப சந்தா கொடுக்கக் கூடிய மக்களை இதில் இன்னும் இணைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. ஏழை மக்களைக் குறித்து நான் கூறும்போது அவர்கள் தியாகங்களில் எவ்வளவோ முன்னேறிவிட்டார்கள் என்று நான் கூறினேன். ஆனால், செல்வந்தர்களும் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

தற்போது நான் கடந்த ஆண்டின் புள்ளி விவரங்களையும் எடுத்துரைத்து விடுகின்றேன். தஹ்ரீகே ஜதீதின் மூலமாக நமக்கு தென்படுகின்ற கனிகளை முதலில் நான் எடுத்துக் கூறிவிடுகின்றேன். ஆரம்ப காலத்தில் நாம் காதியானை தாண்டி வெளியில் இருக்கவில்லை அல்லது இந்தியாவிற்குள் சிறிதளவு நாம் பரவி இருந்தோம். தற்போது உலகில் 220 நாடுகளில் 9330-க்கும் கூடுதலான பள்ளிவாசல்கள் நமக்கு இருக்கின்றன. 3400-க்கும் கூடுதலான மிஷன் ஹவுஸ்கள் நமக்கு இருக்கின்றன. பல டஜன் பள்ளிவாசல்களும், மிஷன் ஹவுஸ்களும் கட்டப்பட்டு வருகின்றன. முபல்லிஃக்குகள் மற்றும் முஅல்லிம்களின் எண்ணிக்கை உலகம் முழுவதிலும் சுமார் ஐந்தாயிரத்திற்கு அருகில் உள்ளது. அந்த எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. அல்லாஹ்வின் அருளினால் 77 மொழிகளில் திருக்குர்ஆன் மொழியாக்கம் செய்யப்பட்டு விட்டன. நூல்கள் அச்சிடப்பட்டு வருகின்றன. பல்வேறு மொழிகளில் ஜமாஅத்தின் நூல்கள் மொழியாக்கம் செய்யப்பட்டு அச்சிடப்பட்டு வருகின்றன. தஹ்ரீகே ஜதீத் மூலமாக எண்ணற்ற பணிகள் நடைபெறுகின்றன. இவை அனைத்தும் தஹ்ரீகே ஜதீத் மூலமாக நடைபெறும் பணிகள் ஆகும். தற்போது மற்ற சந்தாக்களும் இதில் இணைந்து விட்டன என்ற போதிலும், இதில் தஹ்ரீகே ஜதீத் சந்தாவின் பங்களிப்பும் பெருமளவில் உள்ளது.

நான் தற்போது தஹ்ரீகே ஜதீதுடைய புதிய ஆண்டிற்கான அறிவிப்பை செய்கின்றேன். தஹ்ரீகே ஜதீதுடைய 89-வது ஆண்டு 2023 ஆண்டு அக்டோபர் 31-ம் தேதியுடன் முடிவடைந்து விட்டது. தற்போது நாம் 90-ம் வருடத்தில் நுழைந்து கொண்டு இருக்கின்றோம். இந்த வருடத்தில் அல்லாஹ்வின் அருளினால் உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு 17.20 மில்லியன் பவுண்ட் பொருள் தியாகம் செய்வதற்கு நற்பேறு கிடைத்துள்ளது. அல்ஹம்துலில்லாஹ். உலகின் பொருளாதார சூழல் மோசமாக இருந்தபோதிலும், கடந்த வருடத்தைக் காட்டிலும் ஏழு லட்சத்து நாற்பத்தி ஒன்பதாயிரம் பவுண்ட் அதிகமாக நாம் பொருள் தியாகம் செய்திருக்கின்றோம். இந்த வருடமும் ஜெர்மனி ஜமாஅத் உலகெங்கும் இருக்கின்ற ஜமாஅத்துகளில் முதல் இடத்தில் இருக்கின்றது. தனது இடத்தை அது தக்க வைத்துக் கொண்டுள்ளது. கரன்ஸிகளின் மதிப்பு பொருளாதார சூழலின் காரணமாக உலகம் முழுவதும் மிகவும் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தானிலும் பாதிப்பு உள்ளது. ஆயினும், பொதுவான முறையில் அனைவரும் தங்களது தியாகத்தின் தரத்தை உயர்த்தியுள்ளனர். பாகிஸ்தானை தவிர்த்து பார்த்தால் ஜெர்மனி முழுமையாக முதல் இடத்தில் உள்ளது. எல்லா நாடுகளையும் விட மேலே உள்ளது. முதல் இடத்தில் ஜெர்மனி, பின்னர் பிரிட்டன், அடுத்து கனடா. தற்போது கனடா மூன்றாம் இடத்திற்கு வந்து விட்டது. அமெரிக்கா நான்காம் இடத்திற்கு சென்று விட்டது. ஐந்தாம் இடத்தில் மத்திய கிழக்கைச் சேர்ந்த ஒரு நாடு உள்ளது. ஆறாம் இடத்தில் இந்தியா உள்ளது. ஏழாம் இடத்தில் ஆஸ்திரேலியா உள்ளது. எட்டாம் இடத்தில் இந்தோனேஷியா உள்ளது. ஒன்பதாம் இடத்தில் மத்திய கிழக்கைச் சேர்ந்த ஒரு நாடு உள்ளது.பத்தாம் இடத்தில் கானா உள்ளது. இங்கும் மிக அதிகமாக பண மதிப்பு சரிந்துள்ளது. ஆயினும், கானா தனது பத்தாம் இடத்தை (இந்த வருடமும்) தக்க வைத்துக் கொண்டுள்ளது. எடுத்துக் கூறத்தக்க சிறிய ஜமாஅத்துகளில் ஐயர்லாந்து, மொரீஸியஸ், ஹாலந்து, மலேசியா, சிங்கப்பூர், நியூஸிலாந்து, கஸகிஸ்தான், ஜார்ஜியா போன்ற நாடுகள் இருக்கின்றன.

ஆஃப்ரிக்க நாடுகளில் முதல் பத்து இடங்களைப் பிடித்த ஜமாஅத்துகள் பின்வருமாறு: கானா, மொரீஸியஸ், நைஜீரியா, புர்கினாஃபாஸ், தன்ஸானிய்யா, கேம்பியா, உகண்டா, லைபீரியா, சிராலியோன், பெனின் போன்ற நாடுகள் உள்ளன. கலந்து கொண்டவர்களின் ஒட்டு மொத்த எண்ணிக்கை பதினாறு இலட்சத்து முப்பத்தி ஐந்தாயிரத்தை விடவும் அதிகரித்து விட்டது. இதில் அதிகமாக பணியாற்றிய ஜமாஅத்துகளில் கினிகனாகரி, ஜமைக்கா, கிர்கிஸ்தான், ஸேம்பியா, நேபாளம், கானா, கென்யா, தன்ஸானிய்யா, கான்கோ கின்ஷாஸா, காங்கோ ஃபிரேசில், நைஜீரியா, செனிகால்,ஐவரிகோஸ்ட், மற்றும் மத்திய கிழக்கின் ஒரு நாடு போன்றவை உள்ளன.

ஜெர்மனியின் முதல் பத்து ஜமாஅத்துகள். அவற்றில் ரோயட்மார்க், ரோட்காவ், கீல், ஓஸ்னாபார்க், பின்னேபார்க், நோயிஸ், நைடா, கோலோன், மஹ்தியாபாத், ஃபோலோரிஸ் ஹைம். அமாரத்துகளில் ஹம்பர்க் முதல் இடத்தில் உள்ளது. அடுத்து, ஃபிராங்கபர்ட். கிராஸ் கீராவ், வைஸ்படேன், டட்ஸன் பாக், ரேட்ஷடார்ட், ரஸல்ஹேலம், மோர்ஃபில்டன், வால்டார்ஃப்.டாமம்ஷடார்ட், மன்ஹைம்.

பிரிட்டன் நாட்டின் முதல் ஐந்து மண்டலங்கள் பின்வருமாறு: பைத்துல் ஃபுதூஹ் முதல் இடத்தில் உள்ளது. பின்னர் இஸ்லாமாபாத், அடுத்து மிட்லேண்ட், மஸ்ஜித் ஃபஸ்ல், பைத்துல் இஹ்ஸான் ஆகியவை.

பிரிட்டனின் பெரிய ஜமாஅத்துகளில் ; ஃபாரன்ஹர்ம், வோஸ்டர் பார்க், சவுத் சீம், இஸ்லாமாபாத், வால்சால், ஆஷ், ஜீலனங்கம், ஆல்டர் ஷாட் ஸவுத், ஈவல், பிரட்ஃபோர்ட் நார்த்,

சிறிய ஜமாஅத்துகளில் ஸ்பின் வேலி, ஸ்வான் ஸீ, நார்த் ஹேம்ப்டன், நார்த் வேல்ஸ், நியூபோர்ட்.

கனடாவின் அமாரத்துகளில் வாகன் முதல் இடத்திலும், அடுத்து கேல்கரி, பீஸ் வில்லேஜ்,வான்கூவர், மிஸ் ஸாகா, டோரான்டோ போன்ற ஜமாஅத்துகள்.

கனடாவிலுள்ள சிறிய ஜமாஅத்துகள்: ஹேமில்டன் மவுன்ட்டைன், ஆடோவா ஈஸ்ட், பிராட்ஃபோர்ட் ஈஸ்ட், ஹேமில்டன் ஸவுத், மோன்ட்ரல் வெஸ்ட், வின்னீபெக், ரேஜினா, லாயிட்மின்ஸ்டர், அபோட்ஸ்ஃபோர்ட்.

அமெரிக்காவின் ஜமாஅத்துகளில் சிலிகான் வேலி,மேரிலேண்ட் முதல் இடம், நார்த் வேர்ஜினா, லாஸ் ஏஞ்சல்ஸ், ஸீட்டல், சிகாகோ, சிலிகான் வேலி, டேட்ரோயிட், ஹோஸ்டன், ஓஸ்கோஸ், நார்த் ஜெர்ஸி, ஸவுத் ஜெர்ஸி, ஸவுத் வேர்ஜினா, சென்ட்ரல் ஜெர்ஸி, டேலாலஸ்.

பாகிஸ்தானில் வசூலின் அடிப்படையில் முதல் இடத்தில் பொதுவாக லாஹூர் உள்ளது. பிறகு, இரண்டாம் இடத்தில் ரப்வா உள்ளது. பின்னர் மூன்றாம் இடத்தில் கராச்சி இருக்கின்றது.

மாவட்டங்களில் ஃபைஸலா பாத் முதல் இடத்தில் இருக்கின்றது. பின்னர் குஜ்ரன்வாலா, அடுத்து குஜ்ராத், உமர்கோட், ஹைதராபாத், மீர்பூர் காஸ், லூதரான், கோட்லி காஷ்மீர் மற்றும் ஜெஹ்லம்.

வசூலின் அடிப்படையில் பாகிஸ்தானில் அதிகம் தியாகம் செய்த நகர ஜமாஅத்துகளில் அமாரத்துகள்: டவுண்ஷிப் லாஹூர், அமாரத் அல்லாமா இக்பால் டவுண் லாஹூர், அமாரத் தாருஸ் ஸிக்ர் லாஹூர், அமாரத் அஸீஸாபாத் கராச்சி, அமாரத் முஹல் பூரா லாஹூர், முல்தான், அமாரத் பைத்துல் ஃபஸ்ல், பைஸலாபாத், குஜ்ரன்வாலா, குவைட்டா, பெஷாவர்.

அங்கு இருக்கின்ற சிறு ஜமாஅத்துகளில் கோகர் கர்பீ, சோன்டா, கோட் ஷரீஃப் ஆபாத், பஷீர் ஆபாத் சிந்த், காரியான், ஹயாத் ஆபாத், பின்டி பாகூ, தாருல் ஃபஸ்ல் கன்ரீ, நவாஸ் ஆபாத் ஃபார்ம், கைர் ஆபாத்.

இந்தியாவின் (முதல்) பத்து மாநிலங்கள் இருக்கின்றன.முதல் இடத்தில் கேரளா. அடுத்து, தமிழ்நாடு, கர்நாடகா, தெலுங்கானா, ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், பெங்கால், டெல்லி, மகாராஷ்டிரா.

தியாகங்களின் அடிப்படையில் முதல் பத்து ஜமாஅத்துகள்: கோயம்பத்தூர்(தமிழ்நாடு), பின்னர் காதியான், அடுத்து ஹைதராபாத், கோழிக்கூடு, மஞ்சேரி, மேலப்பாளையம், பெங்களூர், கருளை, கேரங்.

ஆஸ்திரேலியாவின் முதல் பத்து ஜமாஅத்துகள்: மெல்போர்ன் லாங் வாரீன், மெல்பேர்ன் பேர்விக், மார்ஸ்டன் பார்க், பென்ரித், பெர்த், அடிலெய்ட் வெஸ்ட். காஸில் ஹில், பிரிஸ்போர்ன் லாஙன் ஈஸ்ட், பர்ராமாட்டா, மெல்போர்ன் கிலாய்ட். இவை அவர்களுடைய பத்து ஜமாஅத்துகள் ஆகும்.

தியாகம் செய்யக் கூடிய இவர்கள் அனைவரின் செல்வத்திலும், வாழ்நாள்களிலும் அல்லாஹ் பரக்கத் செய்வானாக. இவர்கள் முன்பை விட அதிகமாக தியாகம் செய்யக் கூடியவர்களாக ஆகட்டுமாக.

பாலஸ்தீன மக்களை எப்போதும் துஆக்களில் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்; அவர்களை மறவாதீர்கள். பெண்களும், குழந்தைகளும் அநீதியின் உரலில் அரைக்கப்படுகின்றனர். அல்லாஹ் விரைவில் அவர்களின் விடுதலைக்கான ஏற்பாட்டை செய்வானாக.

* * * *

# ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

## (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்களின் ஜெர்மனி சுற்றுப் பயணம்- ஆகஸ்ட் - செப்டம்பர் 2023

**செப்டம்பர் 1, 2023:**

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் காலை 5.40 மணிக்கு ஜல்ஸா திடலின் ஆண்கள் பகுதிக்கு வருகை தந்து ஃபஜ்ர் தொழுகையை தொழ வைத்தார்கள். தொழுகைக்குப் பிறகு ஹுஸூர் அன்வர் அவர்கள் தம்முடைய தங்குமிடத்திற்கு சென்றார்கள். மேலும், காலையில் ஹுஸூர் அன்வர் அவர்கள் தமது அலுவலகப் பணிகளில் மும்முரமாக இருந்தார்கள்.

இன்று அல்லாஹ்வின் அருளினால் அஹ்மதிய்யா ஜமாஅத் ஜெர்மனியின் 47-வது ஆண்டு மாநாடு துவங்கியது. அஹ்மதிய்யா ஜமாஅத் ஜெர்மனியில் நிறுவப்பட்டு நூறு ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில் இந்த மாநாடு நடைபெறுவது வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும்.

**கொடியேற்றம் மற்றும் ஜெர்மனி ஆண்டு மாநாடு ஜும்ஆ பேருரையிலிருந்து துவக்கம்**

நிகழ்ச்சியின்படி மதியம் 1:55 மணிக்கு ஹுஸூர் அன்வர் அவர்கள் பல்வேறு அரங்குகளுக்கு இடையே உள்ள திறந்த புல்வெளி மைதானத்திற்கு கொடியேற்றம் நிகழ்ச்சிக்காக வருகை தந்தார்கள். ஹுஸூர் அன்வர் அஹ்மதிய்யத்தின் கொடியை ஏற்றி வைத்தார்கள். பின்னர் ஹுஸூர் அன்வர் அவர்கள் துஆ செய்தார்கள்.

MTA இன்டர் நேஷனல் சேனலின் நேரலை ஒளிபரப்புகள் இங்கு ஜல்ஸா திடலில் இருந்து காலையிலேயே ஆரம்பமாகியிருந்தன. கொடியேற்றம் நிகழ்ச்சியும் கூட நேரலையாக உலகம் முழுவதிலும் ஒளிபரப்பானது. ஹுஸூர் அன்வர் அவர்கள் ஆண்களின் மாநாட்டுத் திடலுக்கு வருகை தந்து ஜுமுஆ குத்பா நிகழ்த்தினார்கள். அத்துடன் மாநாடு துவங்கியது. வெள்ளிக் கிழமை குத்பாவிற்காக ஆண்கள் திடலில் ஜெர்மன், ஆங்கிலம், அரபு, பிரஞ்சு, போஸ்னியன், பெங்காளி, துருக்கி, ரஷ்யன், பல்கேரியன், அல்பேனியன், ஸ்பானிஷ் ஆகிய மொழிகளில் மொழியாக்கம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. ஆண்களின் மாநாட்டுத் திடலில் வானொலி மற்றும் வெப் ஸ்ட்ரீம் மூலமாக அனைத்து மொழிகளிலும் மொழிபெயர்ப்புகளைக் கேட்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த அதே வேளையில் லஜ்னாவின் அரங்கில் வெப் ஸ்ட்ரீம் மூலம் அனைத்து மொழிகளிலும் மொழிபெயர்ப்புகளைக் கேட்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

MTA இன்டர்நேஷனல் சார்பாக ஆங்கிலம், அரபு, பிரஞ்சு, பெங்காளி, ஜெர்மன், இந்தோனேஷியா, ரஷ்யன், ஸ்வாஹிலி மற்றும் ஸ்பானிஷ் ஆகிய ஒன்பது மொழிகளில் வெள்ளிக்கிழமை குத்பாவின் நேரடி மொழியாக்கத்திற்கு ஏற்பாடு இருந்தது. அதேநேரம், தமிழ், மலையாளம் போன்ற மொழிகளிலும் நேரடி மொழிபெயர்ப்பு செய்யப்பட்டது. மதியம் 2:10 மணிக்கு ஹுஸூர் அன்வர் அவர்கள் ஜும்ஆ குத்பாவை தொடங்கினார்கள். (ஜுமுஆவின் முழு உரையும் செப்டம்பர் 21, 2023 தேதியன்று இதழ் எண் 38 -ல் பத்ர் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளது.)ஹுஸூர் அன்வர் அவர்கள் பிற்பகல் 3 மணி 13 நிமிடம் வரை குத்பா வழங்கினார்கள்.

ஜுமுஆ குத்பாவிற்கு பிறகு ஹுஸூர் அன்வர் அவர்கள் தம்முடைய தங்குமிடத்திற்கு செல்லும் வழியில் மனிதம் முதலில் கண்காட்சியை பார்வையிட்டார்கள். ஹுஸூர் அன்வர் அவர்கள் முந்தைய நாள் கழிவு நீர் வாளி தொடர்பாக வழங்கியிருந்த வழிகாட்டலைக் குறித்து விசாரித்தார்கள். அந்த வாளி கண்காட்சியின் ஒரு பகுதியில் வைக்கப்பட்டுள்ளது என்று ஜெர்மனியின் மனிதம் முதலில் அமைப்பின் இன்சார்ஜ் அவர்கள் பதில் அளித்தார்கள். மேலும்,, ஹுஸூர் அன்வர் அவர்களிடம், பேரிடர் நிவாரணப் பணியின்போது ஒருவரையொருவர் தொடர்பு கொள்வதற்காக இப்போது நாங்கள் எங்கள் சொந்த FUNK அமைப்பையும் தயார் செய்துள்ளோம்; இதன் மூலம் ஏதாவது காரணங்களினால் தொலைபேசி சிஸ்டம் செயலிழந்து விட்டாலும் கூட நமது சிஸ்டம் மூலம் நாம் பரஸ்பரம் தொடர்பு கொள்ள முடியும் என்றும் ஜெர்மனியின் மனிதம் முதலில் அமைப்பின் இன்சார்ஜ் ஸாஹிப் கூறினார்.

இதன் பிறகு, ஹுஸூர் அன்வர் அவர்கள், தம்முடைய தங்குமிடத்திற்கு புறப்பட்டுச் சென்றார்கள். நிகழ்ச்சியின்படி ஹுஸூர் அன்வர் அவர்கள் 9 மணிக்கு மாநாட்டு திடலுக்கு வருகை தந்து மக்ரிப் மற்றும் இஷா தொழுகையை சேர்த்து தொழ வைத்தார்கள். தொழுகைகளை தொழுத பிறகு ஹுஸூர் அன்வர் அவர்கள் தம்முடைய தங்குமிடத்திற்கு சென்றார்கள்

மஸ்ஜித் முபாரக்கின் FLORSTADT திறப்பு விழா 28 ஆகஸ்ட், 2023 அன்று நடைபெற்று இருந்தது. அப்பகுதியின் ஊடகங்கள் கீழ்காணும் விஷயங்களை கவரேஜ் செய்தார்கள். WETTERAUER ZEITUNG என்ற செய்தித் தாள் தமது வெளியீட்டில் இவ்வாறு எழுதியது:

உண்மையில் பல்வேறு சமுதாயங்கள் மற்றும், மதங்களைச் சேர்ந்த மக்களுக்கிடையே பரஸ்பர அமைதியை நிலைநாட்டுவதற்காகவே பள்ளிவாசல்கள் கட்டப்படுகின்றன என்று ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் ஸாஹிப் அவர்கள் பள்ளிவாசல்கள் கட்டுமானத்தின் நோக்கத்தைக் குறித்து கூறினார்கள்.

ஒரு லட்சத்து பன்னிரெண்டாயிரம் என்ற எண்ணிக்கையில் இந்த செய்தித்தாளின் பிரதிகள் வெளியாகின்றன. இதைத் தவிர, கிரிஸ் ஆன்ஸைஜர் மற்றும் பிராங்க்ஃபிரான்ட் என்ற செய்தித்தாள்களும் மஸ்ஜித் திறப்பு விழா குறித்து எழுதியுள்ளன.

இந்த இரண்டு செய்தித் தாள்களின் பிரதிகள் 74,300 என்ற எண்ணிக்கையில் வெளியாகின்றன. இவ்வாறு இந்த மூன்று செய்தித் தாள்களுடைய பிரதிகளின் மொத்த எண்ணிக்கை 1,86,300 ஆகும். இது தவிர பள்ளிவாசல் திறப்பு விழா தொடர்பாக HR-Fernshen செய்தி தொலைகாட்சியின் HESSENSCHAU என்ற நிகழ்ச்சியில் வழங்கப்பட்டது. FLORSTADT நகரில் உள்ள அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் பள்ளிவாசல் திறப்பு விழாவில் சிறப்பு விருந்தினர்கள் வருகை தந்தனர். கலீஃபா ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் அவர்கள் பள்ளிவாசலை திறந்து வைத்தார்கள். சில மாதங்களுக்கு முன்பு தான் NIEDER FLORSTADT-ல் இந்த கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது. உலகெங்கிலும் உள்ள 10 மில்லியனுக்கும் அதிகமான முஸ்லிம்களின் ஆன்மிகத் தலைவரான இவர் இந்த வார இறுதியில் ஸ்டட்கார்ட்டில் நடைபெறும் ஆண்டு மாநாட்டிற்கு தற்போது வந்துள்ளார்கள்.

**2செப்டம்பர் 2023 சனிக்கிழமை**

ஹுஸூர் அன்வர் அவர்கள் காலை 5.40 மணியளவில் ஆண்களின் அரங்கிற்கு வருகை தந்து ஃபஜ்ர் தொழுகையை நடத்தினார்கள். தொழுகைக்குப் பிறகு ஹுஸூர் அன்வர் அவர்கள் தம்முடைய தங்கும் இடத்திற்கு திரும்பிச் சென்றார்கள்.

இன்றைய நிகழ்ச்சியின் படி பெண்கள் அரங்கில் ஹுஸூர் அன்வர் அவர்களுடைய பெண்களுக்கான உரை இருந்தது. நிகழ்ச்சியின்படி மதியம் 12.10 மணிக்கு ஹுஸூர் அன்வர் அவர்கள் பெண்கள் அரங்கிற்கு வருகை தந்தார்கள். நாஸிமா ஆஃலா ஸத்ர் லஜ்னா இமாயில்லாஹ் ஜெர்மனி அவர்கள் தமது துணை நாஸிமா ஆஃலா மற்றும் இதர ஸத்ர் லஜ்னா ஸாஹிபாக்களுடன் இணைந்து ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹுதலா அவர்களை வரவேற்றார்கள். மேலும் பெண்கள் தக்பீர் முழக்கங்களை உயர்த்தியவாறு மிகவும் பற்று மிக்க வடிவில் தமது எஜமானருக்கு நல்வரவு கூறினர். இந்த அமர்வு திருக்குர்ஆன் திலாவத்தின் மூலம் ஆரம்பமானது. அன்பிற்குரிய நவ்ஷின் இஸ்லாம் ஸாஹிபா அவர்கள் திலாவத் ஓதினார்கள். அதன் பிறகு அதன் உருது மொழியாக்கத்தை அன்பிற்குரிய ஹமா நூர்

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)



Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

அல்ஹூதா ஷா ஸாஹிபா அவர்கள் சமர்ப்பித்தார்கள். அதன் பிறகு அன்பிற்குரிய அனிகா ஷாகிர் ஸாஹிபா, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுடைய கீழ் காணும் கவிதைகளை தமது அழகிய குரலில் பாடினார்கள்.

இறை அன்பு அதிகரித்துக் கொண்டே இருக்கட்டுமாக ; இறைவனை காணும் நற்பேறின் சுவையை இறைவன் உங்களுக்கு தந்தருள்வானாக. இதன் பிறகு நிழ்ச்சியின்படி 2019-ம் ஆண்டு முதல் 2023 வரை கல்வித் துறையில் அசாதாரண வெற்றியைப் பெற்ற மாணவிகளின் பெயர்களை மாணவிகளின் தேசிய விவகாரச் செயலாளர் வாசித்தார். லஜ்னா இமாயில்லாஹ்வின் ஆண்டு இஜ்திமாவில் இந்த மாணவிகளுக்கு ஹுஸூர் அன்வர் அவர்களின் வழிகாட்டலின்படி பதக்கம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மேலும் சிலருக்கு இந்த ஆண்டு வழங்கப்படும். இன்ஷா அல்லாஹ்

இதன் பிறகு 12;40 மணிக்கு ஹுஸூர் அன்வர் அவர்கள் பெண்களுக்கான உரையை நிகழ்த்தினார்கள்.

தஷ்ஷஹுத் மற்றும் தவூத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸூர் அன்வர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: பிரிட்டனின் ஆண்டு மாநாட்டில் பெண்களின் மாநாட்டுத் திடலில் நான் ஆரம்ப கால (இஸ்லாமிய) பெண்களின் சம்பவங்களை எடுத்து வைத்திருந்தேன். இன்று அதன் தொடர்ச்சியாக இங்கும் சில சம்பவங்களை எடுத்துரைப்பேன். இன்ஷா அல்லாஹ். அந்தப் பெண்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இருந்து நேரடியாக அருளைப் பெற்றார்கள். மேலும், வாழ்வின் ஒவ்வோர் அம்சத்திலும் இஸ்லாமிய போதனையின் உண்மை முகத்தை முன் வைக்க முயற்சி செய்தார்கள். அது இறைவனுக்கு கட்டுப்படுதலாக இருக்கட்டும்; அல்லது இறை வணக்கத்தின் தரங்களாக இருக்கட்டும்; அல்லது அடிப்படை குடும்ப சமூக பொறுப்புகளாக இருக்கட்டும்; குழந்தைகளின் தர்பிய்யத்தாக இருக்கட்டும்; உயிர் மற்றும் உடைமைகளை தியாகம் செய்வதாக இருக்கட்டும்; இஸ்லாத்திற்காக வீரத்தை வெளிப்படுத்தக் கூடிய சந்தர்ப்பமாக இருக்கட்டும்; சுருக்கமாக, எல்லா சந்தர்ப்பத்திலும் எல்லா அம்சத்திலும் இந்தப் பெண்கள் பெண்களுக்கு மட்டும் அல்ல ; மாறாக, ஆண்களுக்கும் ஒரு முன்மாதிரியை நிலைநாட்டியுள்ளார்கள். இறை வழியில் பொருள் தியாகம் செய்வது தொடர்பாக ஒரு சம்பவம் இவ்வாறு வருகின்றது:

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பெருநாளன்று தமது இல்லத்திலிருந்து புறப்பட்டு இரண்டு ரக்அத்துகள் தொழுதார்கள். இதற்கு முன்பும், பின்பும் அன்னார் (ஸல்) எந்த நஃபில் தொழுகையும் தொழவில்லை. பெருநாளன்று ஈத் தொழுகைக்கு முன்பும், பின்பும் எந்தத் தொழுகையும் தொழப்படமாட்டாது என்ற விவகாரம் இங்கு தெளிவாகி விட்டது. பின்னர், அன்னார் (ஸல்) பெண்கள் பகுதிக்கு சென்றார்கள். அன்னாருடன் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களும் இருந்தார்கள். பிறகு, அன்னார் (ஸல்) பெண்களுக்கு இவ்வாறு அறிவுரை செய்தார்கள்: அதாவது அவர்களுக்கு தானதர்மம் செய்யுமாறு கட்டளையிட்டார்கள்.

ஆக, பெண்கள் தங்களுடைய காதணி, வளையல் மற்றும் தங்களிடம் இருந்த அணிகலன்களை கழற்றி கொடுத்து விட்டார்கள். பொருள் தியாகத்தில் அல்லாஹ்வின் அருளினால் இன்று அஹ்மதிப் பெண்களும் தங்களுடைய முன்மாதிரிகளை நிலைநாட்டக் கூடியவர்களாக இருக்கின்றனர். மேலும், இந்த முன்மாதிரியே அவர்களுடைய வீடுகளில் அருளை ஏற்படுத்தும். ஏற்படவும் செய்கின்றது. அவர்களுடைய ஆன்மாக்களிலும் செல்வங்களிலும் அருள் ஏற்படுகின்றது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் (நீங்கள்) நற்பண்புகளால் அலங்கரிக்கப்பட வேண்டும் என்று பெண்களுக்கு அறிவுரை கூறி வந்தார்கள். வீணான வேலைகளில் எந்த பலனும் இல்லை. மக்கள் எழுதுகின்றனர்: இந்த விஷயத்தை செய்யலாமா? இன்ன வேலையை செய்யலாமா? இசையை கற்று தேர்ச்சி பெறலாமா? என்று இளம் பெண்கள் எழுதுகின்றனர். அவற்றால் எந்தப் பலனும் இல்லை. பலனை தரக் கூடிய விஷயங்களை செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் உம்மே ஸினான் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சபையில் ஆஜராகினேன். அன்னாரிடம் நான் இஸ்லாத்தின் பைஅத்தை செய்தேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய பரிவு மிக்க பார்வை என்னுடைய கைகள் மீது பட்டது. அன்னார் (ஸல்) கூறினார்கள்:

உங்களில் ஒரு பெண் தன்னுடைய நகங்களை அலங்கரித்துக் கொள்வதால் அல்லது அவருக்கு உடுத்துவதற்கு எந்தப் பொருளும் கிடைக்கவில்லை என்றால் பின்னர் மணிக்கட்டில் பட்டுத் துணி அல்லது தோல் கயிறைக் கட்டினால் அவள் மீது எந்தக் குற்றமும் இல்லை. ஹஸ்ரத் உம்மே ஸினான் (ரலி) அவர்கள் இந்த அறிவுரைப்படி நடந்து வந்தார்கள்

. பெண்கள் அலங்கரித்துக் கொள்ளலாம்; அணிகலன் அணிந்து கொள்ளலாம் என்று இதிலிருந்து நிரூபணமாகின்றது. நெயில் பாலிஷ் போடுவது தடுக்கப்பட்டது ஆகும் என்று எங்களிடம் அந்நியர்கள் சொல்கின்றார்கள்; நெயில் பாலிஷ் போடலாமா? என்று நிறைய பெண் பிள்ளைகள் கேள்வி கேட்கின்றனர்.

இந்த ஹதீஸிலிருந்து நமக்கு நெயில் பாலிஷ் போடலாம் என்று நிரூபணம் ஆகின்றது. இந்த விஷயம் தடுக்கப்பட்டதல்ல. இது தவறான விஷயமும் இல்லை. ஸஹாபியாத் நற்செயல்களை அடைய முயன்று வந்தார்கள். ஒரு தாய் ஒரு நல்ல செயலை எண்ணி வாழ்க்கை அவளுக்கு ஆதரவளிக்கவில்லை என்றால் இறந்தவரின் சார்பாக அந்த நற்செயலைச் செய்ய முயற்சிக்க வேண்டும். ஓர் அறிவிப்பில் வருகின்றது: ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஜுஹினா கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு பெண் வந்து கேட்டார்: என்னுடைய தாய் ஹஜ் செய்ய வேண்டும் என்று எண்ணம் கொண்டிருந்தார் ; ஆனல் அவரால் ஹஜ் செய்ய முடியவில்லை ; மரணித்து விட்டார். எனது தாய் சார்பாக நான் ஹஜ் செய்யலாமா? என்று கேட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஆம், நீங்கள் ஹஜ் செய்யலாம்; உங்களுடைய தாய் கடனாளியாக இருந்தால் நீங்கள் அந்தக் கடனை திரும்பி செலுத்த மாட்டீர்களா? இறைவனுடைய கடனை திருப்பி செலுத்துங்கள். ஏனெனில், இறைவனுடன் நன்றியுடன் இருப்பதற்கு அதிக உரிமை கொண்டவன். மேலும், இறைவனோடு எல்லாவற்றுக்கும் அதிகமாக நன்றியுணர்வோடு இருக்க வேண்டும்.

இஸ்லாத்தின் தொடக்கத்தில் உயிர் தியாகி அந்தஸ்து பெற்றவர்களில் ஒரு பெண்ணும் இருந்தார் என்று வரலாற்றில் எழுதப்பட்டுள்ளது. இதனுடைய விளக்கமாவது, ஹஸ்ரத் ஸுமைய்யா பின்த் முஸ்லிம் (ரலி) அவர்கள் இஸ்லாத்தைத் தழுவிய போது, நிராகரிப்பாளர்கள் அன்னாரைப் பல்வேறு வழிகளில் கொடுமைப்படுத்த துவங்கினர். மிகக் கொடுமையான சித்திரவதை என்னவாக இருந்தது என்றால், மக்காவின் சுடு மணலில் இரும்புக் கவசம் அணிந்து அன்னாரை வெயிலில் நிற்கச் செய்தனர். இதன் பிறகும் கூட அன்னார் இஸ்லாத்தில் உறுதியாக நிலைத்திருந்தார்கள். ஒரு நாள் நிராகரிப்பாளர்கள் வழக்கம்போல் இரும்புக் கவசம் அணிந்து அன்னாரை சுடும் மணலில் படுக்க வைத்தனர். அந்த நிலையில் அங்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அன்னாரைக் கடந்து செல்லும்போது, பொறுமையாக இருங்கள்; உங்களின் தங்குமிடம் சொர்க்கத்தில் உள்ளது என்று கூறினார்கள்.

ஆனால், நிராகரிப்பாளர்கள் அதிலும் திருப்தி அடையாததால் அபூஜஹல் அன்னாருடைய தொடையில் ஈட்டியை பாய்த்து ஷஹீதாக்கி விட்டான். ஆக, இஸ்லாத்தின் முதல் உயிர் தியாகம் செய்யும் நற்பேறு இவருக்குக் கிடைத்ததாக வரலாற்றில் சில இடங்களில் எழுதப்பட்டுள்ளது.

அல்லாஹ்வின் வழியில் பிள்ளைகளையும் கூட ஒரு துணிச்சலுடன் தியாகம் செய்யக்கூடிய பெண்களின் முன்மாதிரி நிகரற்றதாகும். இது குறித்து வரலாற்றில் ஒரு சம்பவம் குறிப்பிடப்பட்டுள்ளது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் இப்னு ஸுபைர் ஹஜ்ஜாஜுடன் சண்டையிட்டபோது அன்னாருடைய தாயார் ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்தார்கள். அன்னார் சென்று அவருடைய உடல்நிலையை விசாரித்த பிறகு மரணிப்பதில் நிம்மதி என்று அவர் கூறினார். தாயின் நிலையைக் கண்டு (ஹஸ்ரத் அப்துல்லாஹ்(ரலி)) அவர்கள் ஆறுதல் கூறினார்கள்.

அப்போது அன்னாரின் தாயார் கூறினார்கள்: ஒருவேளை நான் இறக்க வேண்டும் என்று நீங்கள் விரும்பலாம். ஆனால், இரண்டில் ஒன்று நடந்தாலொழிய நான் மரணிக்க விரும்பவில்லை. அந்த இரண்டு விஷயங்கள் என்ன? என்றால், ஒன்று, நீ! ஷஹீது ஆகிவிட்டால் நான் பொறுமை செய்து கொள்வேன் அல்லது வெற்றி பெற்றால் என் கண்கள் குளிர்ச்சி அடையும். ஆக, அன்னார் போரில் ஷஹீதாகிவிட்டர்கள். ஹஜாஜ் அன்னார் ஷஹீது ஆன பிறகு அன்னாரை சிலுவையில் அறைந்து விட்டான். ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்கள் வயதானவராக இருந்தபோதிலும், இந்த பயங்கரமான காட்சியைக் காணச் சென்றார்கள். அங்கு அழுது ஒப்பாரி வைப்பதற்கு பகரமாக ஹஜாஜை பார்த்துக் கூறினார்கள்: இந்த சவாரிக்கு தன்னுடைய குதிரையை விட்டு கீழே இறங்கக் கூடிய நேரம் இன்னும் வரவில்லை. அதாவது மிகவும் தைரியமாக அன்னாரை பாராட்டினார்கள்.

(தொடரும்......)

தமிழாக்கம்: மவ்லவி ஜாஹிர் ஹுஸைன்

* * * *

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 8 Thursday 07 DECEMBER 2023 Issue No. 49

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

## தஃப்ஸீரே கபீர்... (1ம் பக்க தொடர்ச்சி)

நீரூற்றில் சூரியன் மறைந்து கொண்டிருந்தது. 3) அதன் பிறகு அவர் கிழக்குப் பக்கம் கவனம் செலுத்தினார். மேலும், கிழக்கத்திய நாடுகளை வெற்றி கொண்டார். 4) பின்னர் அவர் ஓர் இடைப்பட்ட பகுதிக்குச் சென்று விட்டார். அங்கு யஃஜூஜ் மற்றும் மஃஜூஜ் மீது தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தார். மேலும் அவர் அங்கு சுவரை எழுப்பினார்.

துல்கர்னைன் குறித்து வரையறை செய்வதற்கு முன்னர் நாம் இதனை பார்ப்பது அவசியம் ஆகும். அதாவது, எந்த நபர் நமது எண்ணத்தில்

مشارٌ اليه ذوالقرنين

என்று அழைக்கப்படுவதற்கு தகுதி படைத்தவராக இருக்கின்றாரோ அவரிடத்தில் இந்த விஷயம் காணப்படுகின்றதா? இல்லையா? என்று பார்ப்பது அவசியம் ஆகும். குறிப்பாக, அவர் இல்ஹாமை பெறக் கூடியவராகவும், இறைவனால் ஒப்புக் கொள்ளப்பட்டவராகவும் இருக்கின்றாரா? இல்லையா? என்ற விஷயத்தையும் பார்க்க வேண்டும்.

மேதியா மற்றும் பாரசீக பேரரசர்களில் யாரோ ஒரு அரசர் தான் இங்கு பொருள் என்ற விவகாரமோ ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டு விட்டது. ஏனெனில், தானியால் நபியின் கனவு அவருக்கே துல்கர்னைன் என்ற பெயரை வழங்கியுள்ளது. அவர்களில் எந்த அரசர் இந்தப் பண்புகளை தன்னகத்தே கொண்டுள்ளார் என்பதே நாம் பார்க்க வேண்டியது ஆகும். எல்லாவற்றையும் விட முதலிலும், முக்கியமாகவும் இல்ஹாமின் பண்பு இருக்கின்றது. இது தொடர்பாக நாம் வரலாற்றை பார்க்கும்போது பின்னர் பாரசீக மன்னர்களில் ஒரு மன்னர் நமக்கு இப்படிப்பட்டவராக கிடைக்கின்றார். அதாவது, எவருக்கு இல்ஹாம் வந்து கொண்டிருந்ததோ மற்றும் எவருடைய நன்மை மற்றும் இறையச்சத்தின் புகழ் நமக்கு மற்ற நபிமார்களின் வேதத்திலிருந்து கிடைக்கின்றதோ அவர் இந்த கோரிஸ் என்ற மன்னர் ஆவார். அவர் ஆங்கிலத்தில் சைரஸ் என்று எழுதுகின்றனர். ஏசாயா நபி இது தொடர்பாக எழுதுகின்றார்கள்:

கர்த்தராகிய நான் மஸீஹோ கோரேசுக்கு முன்பாக ஜாதிகளை அவருக்கு கீழ்ப்படியச் செய்து, ராஜாக்களின் இடைக்கட்டுகளை அவிழ்க்கும்படியும், அவனுக்கு முன்பாக வாசல்கள் பூட்டப்படாதிருக்க கதவுகளைத் திறந்து வைக்கும்படிக்கும், அவனைப் பார்த்து அவனது வலது கையைப் பிடித்துக் கொண்டு, அவனுக்குச் சொல்லுகிறதாவது: நான் உனக்கு முன்னே போய், கோணலானவைகளைச் செவ்வையாக்குவேன்.

உன்னைப் பெயர் சொல்லி அழைக்கிற இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் நானே என்று நீ அறியும்படிக்கு,வெண்கலக் கதவுகளை உடைத்து, இரும்புத் தாழ்ப்பாள்களை முறித்து அந்தகாரத்தில் இருக்கிற பொக்கிஷங்களையும் ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்களையும் உனக்குக் கொடுப்பேன். நான் தாசனாகிய யாக்கோபினிமித்தமும், நான் தெரிந்து கொண்ட இஸ்ரேவலினிமித்தமும், நான் உன்னைப் பெயர் சொல்லி அழைத்து, நீ என்னை அறியாதிருந்தும், உனக்கு நாமம் தரித்தேன். (ஏசாயா, அதிகாரம் 45- வசனம் 1-4)

ஏசாயா நபியின் இந்தக் கூற்றில் இருந்து கோரேஸ் பெயர் கொண்ட மேதியா மற்றும் பாரசீக மன்னருக்கு இறைவன் புறமிருந்து அருள் வழங்கப்பட்டது. ஏனெனில், அவரை மஸீஹ் என்று கூறப்பட்டுள்ளது. (கோரேஸை துல்கர்னைன் மஸீஹ் மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்றும் கூறப்பட்டுள்ளது என்ற உண்மையும் நினைவிற் கொள்ளத் தக்கதாகும்)

பின்னர் எழுதப்பட்டுள்ளது: அவருக்கு அல்லாஹ் தனது சிறப்பான அருளினால் ஆட்சியை வழங்கியிருந்தான்.

اِنَّا مَكَّنَّا لَهٗ فِي الْاَرْضِ وَاٰتَيْنٰهُ مِنْ
كُلِّ شَيْءٍ سَبَبًا

நாம் அவருக்கு ஆட்சியை வழங்கியிருந்தோம். ஒவ்வொரு அவசியமான விஷயத்தையும் பெறுவதற்கான வழிமுறைகளை வழங்கியிருந்தோம். என்று துல் கர்னைன் குறித்து திருக்குர்ஆன் கூறியுள்ளது.

இதேபோன்று, நான் உமக்கு முன்பாக செல்வேன். உமது கோணலானவைகளை நான் செவ்வையாக்குவேன் என்று எழுதப்பட்டுள்ளது. இதிலிருந்து அவர் மிக அதிகமாக பயணம் செய்வார் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இதுவே திருக்குர்ஆனிலிருந்தும் வெளிப்படுகின்றது. பின்னர் ஏசாயாவின் இல்ஹாமில் இவ்வாறு உள்ளது. நான் இஸ்ரவேலின் தேவன் ஆவேன்; அவனே உம்மை பெயர் சொல்லி அழைத்துள்ளான்.

قُلْنَا يٰذَا الْقَرْنَيْنِ

(துல்கர்னைனே என்று நாம் பெயர் கூறி அழைத்தோம்)என திருக்குர்ஆனிலும் வருகின்றது.

பின்னர், நான் உம்மை பரிவுடன் அழைத்துள்ளோம் என்று எழுதப்பட்டுள்ளது. பின்னர், நீ என்னை அறியாதிருந்தும் என்று எழுதப்பட்டுள்ளது. இது இதன் பக்கம் சுட்டிக் காட்டுகின்றது. அதாவது, அவர் தவ்ராத்தின் பெயர்களில் இறைவனை வணங்கி வரவில்லை. மாறாக, வேறு பெயர்களில் (இறை வணக்கம் செய்து வந்தார்)

ஆக, அவர் ஜொராஸ்டர் நபியை பின்பற்றியவராக இருந்தார் என்று வரலாற்றில் இருந்து நிரூபணமாகின்றது.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 4, பக்கம் 495, காதியான் பதிப்பு 2010-ம் ஆண்டு)

* * * * *

## மல்ஃபூஸாத்... (1ம் பக்க தொடர்ச்சி)

اَنَا عِنْدَ ظَنِّ عَبْدِيْ بِيْ

என்பதன் உண்மைத்துவம் இதுவே ஆகும். சில நேரங்களில், ஒரு நம்பிக்கையாளருக்கு அல்லாஹ்வுடன் இருக்கின்ற அந்த தொடர்புகளைக் குறித்த ஞானம் இல்லாத காரணத்தினால் உண்மையான அறிவும், இறை ஞானமும் கிடைக்கப் பெற்றிராத மக்கள் அவரது சில நிலைகளை உதாரணமாக, ரிஸ்க் விவகாரம் மற்றும் பொருளாதார நிலையைக் கண்டு ஆச்சரியத்தையும், வியப்பையும் வெளிப்படுத்துகின்றனர். மேலும், சிலமுறை அது அவர்களை தப்பெண்ணம் மற்றும் வழிகேடு வரை கொண்டு செல்கின்றது. ஏனெனில் அவர்களின் பார்வை தங்களது குறுகிய காரணிகளின் மீதே இருக்கின்றது. மேலும், அவர் அல்லாஹ்வுடன் கொண்டிருக்கின்ற அந்த இரகசியத்தை அவர்கள் அறியாதவர்களாக இருக்கின்றனர். அல்லாஹ்வுடன் ஸஹாபா பெருமக்கள் தங்களது இரகசியத்தை ஆக்கிக் கொண்டது போன்று எமது தோழர்கள் இந்த இரகசியத்தை ஆக்கிக் கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகின்றேன்.

(மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 499 - காதியான் பதிப்பு 2018-ம் ஆண்டு பதிப்பு)

* * * * *

**துஆவிற்கான அறிவுரை**

**பாலஸ்தீன மக்களை எப்போதும் துஆக்களில் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்; அவர்களை மறவாதீர்கள். பெண்களும், குழந்தைகளும் அநீதியின் உரலில் அரைக்கப்படுகின்றனர். அல்லாஹ் விரைவில் அவர்களின் விடுதலைக்கான ஏற்பாட்டை செய்வானாக.**

**(ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) குத்பா பேருரை - 03.11.23)**

National Watch Company
Sales & Service

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
O.A.N. Doors & Steels
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad